# தொண்டன்

ஆரம்பம் : 1969 பெப்ரவரி
ஜூன் 2009
சமய - சமூக - இலக்கிய வெளியீடு
20/=

"உயிர்களை வேட்டையாடி
ஓடும் உதிர ஆற்றில்
உள்ளங்களை வெல்ல - வெற்றி
ஓடம் விடுவோம் !"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜூன் - 2009


மலர்: 41 இதழ்: 05


**ஆசிரியர்**
றொ்ஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
வயலற் சந்திரசேகரம்

**கணினி வடிவமைப்பு**
நிரோன்

**வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | : | 01 |
| அன்பின் அருட்தந்தையர்களே.. | : | 02 |
| ஈழத்தை அழுந்த புனிதன் | : | 03 |
| மூன்று கிறித்தவ தமிழ்.... | : | 04 |
| செல்லிடப் பேசிகள்... | : | 07 |
| பவுலின் காலத்து... | : | 08 |
| கடுகுக் கதை | : | 09 |
| உங்கள் சுகமான.... | : | 10 |
| பெண்களும... | : | 11 |
| தொண்டனின் சில நிமிடங்கள் | : | 14 |
| மாணவர் பக்கம் | : | 17 |
| இலக்கிய மஞ்சரி | : | 18 |
| அவலத் துளிகள்.. (சிறுகதை) | : | 20 |
| சகுனம் பார்த்தல் | : | 24 |
| காற்றில் கலந்து வரும் | : | 26 |
| விவிலியம் கற்போம் | : | 27 |
| அறிவை வளர்ப்போம் | : | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com


விலை : 20/=
ஆண்டு சந்தா : 350/=
(தபாற்செலவு உட்பட)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

"தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டத்தை முன்வைக்காவிட்டால் மேலும் பல பிரபாகரன்கள் உருவாகுவார்கள்" இது பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண தெரிவித்த கருத்து. ஆகவே ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வை அடைவதற்கு பிரபாகரன் வழி சமைத்துள்ளார் என்பதை பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண அவர்களின் கூற்று நிரூபித்து நிற்கின்றது.

"இந்த நாட்டில் இனிமேல் பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் என்போர் இல்லை. மாறாக நாட்டை நேசிப்பவர்கள் நேசிக்காதவர்கள் என்போரே உள்ளனர்" இது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்த இராணுவ வெற்றி முழக்கச் செய்தி. அப்படியானால் நாட்டை நேசிக்காதவர்கள் ஏன் உருவாகின்றார்கள்? எவ்வாறு, எதனால் இந்நிலைமை ஏற்படுகின்றது என்பதை ஏன் இவர்களால் சிந்தித்து ஏற்றுக்கொள்ள முடியவில்லை?

வடக்குக் கிழக்கு இணைந்த அதிகாரப் பரவலாக்கல் விடயத்தில் எவ்வாறான நிலையை பேராசிரியர் திஸ்ஸவித்தாரண தலைமையிலான அனைத்துக்கட்சி சம்மேளனம் கொண்டிருக்கிறது? J.H.U, J.V.P, N.F.F, இவர்களின் துணைகொண்டுதான் ஜனாதிபதி தமிழ்ப் பிரதேசத்தில் போர் நடத்தி வெற்றியும் பெற்றுள்ளார். எனவே இந்த மதவாத, இனவாதக் கட்சிகளை மீறி தன்னிச்சையாக, தமிழர் நலன் கருதி தீர்வுத்திட்டத்தை ஜனாதிபதியால் முன்வைக்க முடியுமா? வெற்றிக்களிப்பில் களிக்கும் பெரும்பான்மை சிங்கள சமூகம்தான் விட்டுக்கொடுக்குமா? அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்நோக்கிக் காத்திருக்கும் ஜனாதிபதிதான் தனது வாக்குவங்கியை தாரை வார்ப்பாரா?

தாங்கள் சொல்வதையும் செய்வதையும் நியாயப்படுத்தி சர்வதேச அளவில் (ஐ.நா) வெற்றிகொள்ளும் அரசாங்கத் தரப்பு அடுத்தகட்டமாக என்ன செய்யப் போகிறது? இப்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த களம் இறங்கி இருக்கிறது. அதன் பின்னர் அகதிகளாக்கப்பட்டுள்ள வன்னி மக்களை அவர்களது சொந்த இடத்தில் குடியமர்த்தாது வேறு வேறு இடங்களில் செவ்வனே திட்டமிட்டு கிராமங்களை அமைத்து, அதைச்சுற்றி இராணுவ முகாம்களால் வேலியிட்டு, நில் என்றால் நிற்கவேண்டிய, இரு என்றால் இருக்கவேண்டிய நாதியற்ற மக்களாக, நடைப்பிணங்களாக்குவதேயாகும்.

"புலிகள் மரங்களில் மறைந்து நின்று தாக்குதல் நடத்தினால் ஒவ்வொரு மரத்திற்கும் ஒரு இராணுவ வீரரை நிறுத்துவோம்" என்று கங்கணம் கட்டியிருக்கிறார் இளைப்பாறவேண்டிய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா. இதன் அடிப்படையில் தான் 300,000 இராணுவத்தினர்கள் கொண்ட நாடாக இலங்கையை மாற்ற முற்படுகின்றனர். அப்படியென்றால் இராணுவ ஆட்சி நடைபெறுகின்ற, பெயரளவில் ஜனநாயகத்தைக் கொண்ட நாடு என்று சொல்லலாம் அல்லவா? இத்தகைய நாட்டை நேசிப்பவர்கள் யாராக இருப்பார்கள்? இராணுவ ஆட்சியை விரும்புகின்றவர்கள்தானே.

யாரை இராணுவத்தில் இணைக்கப்போகின்றார்கள்? சிங்களவர்களைத்தான். ஏனெனில் கிழக்கு மாகாணத்தில் பொலிசில் சேர்த்துக்கொள்ளப்பட்ட தமிழர்களுக்கு ஆயுதம் கொடுக்கப்படவில்லை என்பதை நாட்டு மக்கள் அறிந்திருக்க வாய்ப்பிருக்கிறதோ என்னவோ? தமிழர்கள் சிந்திக்கட்டும், ஒன்றுபடட்டும். இறைவா காப்பாற்று! மன்றாடுவோம்.

- ஆசிரியர்



## இறைவாக்கு

"இயேசுக் கிறிஸ்துவின் வழியாய்க் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் தூய குருக்களின் கூட்டமாகவும் இருப்பீர்களாக"

(1 பேதுரு: 2:5b)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அருட்தந்தையர்களே! அருட்சகோதரர்களே! அருட்சகோதரிகளே! இறைமக்களே!



**இன்று துன்பத்தில் ஓலமிடும் எம் சகோதரர்களின் குரலை நாம் கேட்டும் உதவி செய்ய மறுத்தால் நாம் வாழ்ந்தும் பயனில்லை.**

கடந்த கால்நூற்றாண்டுகளுக்கு மேலாக இடம்பெற்றுவரும் போரின் உச்சக்கட்டத்தின் விளைவுகள் சுனாமியை விட பன்மடங்கு வன்னிவாழ் மக்களைப் பாதித்துள்ளதையும் தொடர்ச்சியான யுத்தத்தினாலும் இடப்பெயர்வுகளினாலும் அவர்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் அவலங்களையும் அக்கிரமங்களையும் நீங்கள் நன்கு அறிவீர்கள். இன்று மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட அகதிகள் வவுனியா, செட்டிக்குளம், மன்னார், புல்மோட்டை போன்ற பகுதிகளில் குவிக்கப்படுகின்றனர். அவர்களது தொகை பெரிதானதால் உடனடியாக அவர்களுக்குத் தேவைப்படுவது உணவு, குடிநீர், உடை, குழந்தைகளுக்கான பால்மா, மருத்துவ வசதிகள் போன்றவையாகும்.

நேற்றைய நாள் கடந்துவிட்டது. நாளை என்ன நடக்குமோ தெரியாது. இன்றைய நாள் எம் கரங்களில் உள்ளது. இன்று துன்பத்தில் ஓலமிடும் எம் சகோதரர்களின் குரலை நாம் கேட்டும் உதவி செய்ய மறுத்தால் நாம் வாழ்ந்தும் பயனில்லை. "இந்தச் சிறியவர்களுக்கு நீங்கள் செய்ததெல்லாம் எனக்கே செய்தீர்கள்" எனக் கூறிய நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் அறைகூவலுக்குச் செவிசாய்த்து துயரத்தில் உழலும் எம் சகோதரர்களில் அவரைக் கண்டு உதவ முன்வருவோம். நாளைவரை காத்திருக்க வேண்டாம். இன்றே அவர்களுக்கு உணவளிக்காவிட்டால் நாளை அவர்கள் இருக்கமாட்டார்கள்.

"உன் கண்களுக்குப் புலப்படும், உன் அயலில் வாழும், உன் நாட்டில் வாழும் உன் சகோதரனை அன்பு செய்யாமல், உன் கண்களுக்குப் புலப்படாத கடவுளை எப்படி அன்பு செய்ய முடியும்?" எனக் கேட்கிறார் புனித யோவான் (1யோவா 4:20). "நாம் பிறருக்குச் செய்வதெல்லாம் நறுமணம் வீசும் காணிக்கையும் கடவுளுக்கு உகந்த பலியுமாகும்" (பிலி 4:18)

ஏனைய மக்கள்கூட எமது நாட்டிலும் பிற நாட்டிலுமிருந்து இன, மத, மொழி பேதம் பாராமல் உதவிக் கரம் நீட்ட முன்வந்துள்ளனர். அங்கு தேவைப்படும் தொகை அளவிட முடியாதவை. இதன் பொருட்டு எமது மறைமாவட்டத்தில் உள்ள சகல பங்குகளிலும் நிறுவனங்களிலும் உதவிகள் பணமாகவோ, பொருட்களாகவோ திரட்டப்பட்டு எகெட், கரித்தாஸ் நிறுவனத்தினூடாக வன்னி மக்களின் துயர் துடைக்க துரித கதியில் அனுப்பிவைக்க நாம் தீர்மானித்துள்ளதால் அனைத்து நல் உள்ளங்களையும் தாராள மனத்தோடு காணிக்கைகளை உவந்தளிக்குமாறு அன்புடன் கேட்டு நிற்கின்றோம். இது தொடர்ந்தும் செயற்படவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் எமது நாட்டில் போர் ஒழிந்து உண்மையிலும் நீதியிலும் கட்டுப்படும் நிரந்தர சமாதானத்திற்கான பாதைகள் விரைவில் திறக்கப்படவேண்டுமென இடைவிடாது வேண்டுதல் செய்வோம்.

**இப்படிக்கு**

**இறை ஆசீர் வேண்டிநிற்கும்**

**அதிவண. யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**

**ஆயர், திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்காவியம்

# ஈழத்தை அளந்த புனிதன் (யோசேவ் வாஸ்)



## 3

செண்பகக்குழல்வாய்மொழி

### சின்னவிழிச் சொப்பனங்கள்

(வேறு)

ஆன்மநற் போசனம்
தேவநற் கருணைமேல்
அயராது கொண்டகாதல் - முற்றி
தேன்மலர்ச் சோலையில்
தேறலில் நீந்திடும்
சிறுவண்டு போல ஆனார்
விட்டதா காதலும்
விழிநிறை ஏக்கமும்
தொட்டதால் ஒட்டிக்கொண்டு - வாஸ்
கட்டவிழ் வானிலே
களிநடம் புரிந்திடும்
கடிநிலைச் சித்தரானார்

ஆன்மநல் லூட்டமும்
அறிவுவிஸ் வாசமும்
அவரினில் மிளிரமிளிர - தன்
ஊனிலும் உணர்விலும்
ஒளிர்விடும் பொன்னென
உறுதியில் வளரலானார்
ஓவியம் போலவர்
நெஞ்சினில் தீட்டிய
ஒருதலைக் காதல்வண்ணம் - முற்றி
தேவனின் பாதையே
தனக்குரித்தானதென்
றெண்ணியே தீர்க்கமானார்

கனவுகள் சுரந்திடும்
இளமையின் விளிம்பினில்
இவரது கனவுவேறு - தன்
மனமெனுஞ் சோலையில்
இறையெனும் நறுமணம்
புயலென வீசக்கண்டார்
கருவினில் தேவனார்
எழுதிய தீர்ப்பினை
மனிதரும் அறியலாமோ? - என
இருபத்து நான்கெனும்
இளநிலை வயதினில்
குருநிலை எய்யலானார்

கனவுகள் மெய்த்திட
கடிமனச் சித்தரோ
"கடவுளின் அடிமை"யென்றார் - அந்தக்
கணமதில் அவருளம்
உடலென அனைத்துமே
இறையவன் சொந்தமாச்சு
முதுபெரும் ஞானிபோல்
முழுவதும் துறந்திட
முனைந்தவர் ஆன்மவேகம் - கண்டு
முனைவரும் முனிவரும்
அனைவரும் இன்னுமேன்
இறைவனும் வியந்துபோனார்

– வளரும் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று கிறித்தவ தமிழ் இலக்கிய நூல்களின் நூலாராய்வு 01

## சில வார்த்தைகள்

2009ம் ஆண்டின் வசந்தகாலம் ஆரம்பித்துவிட்டது. கனடாவில் நிலவிய கடும் குளிர்காலம் மெல்ல மெல்ல அகல, குளிரில் விறைத்த வெறுங் கிளைகளுடன் மரத்து நின்ற மரங்களில் இலை மொட்டும் பூ மொட்டும் அரும்பத் தொடங்கிவிட்டன. இதுவரை நிலவிய பனிக்கால அமைதியைக் கலைத்துக்கொண்டு குருவிகளும் சிட்டு களும் இசைபாடத் தொடங்கிவிட்டன. பனி கரைந்த நிலத்திலிருந்து கஸ்தூரி மலர்கள் தலைகாட்டி வசந்தத்திற்குக் கட்டியம் கூறவுந் தொடங்கிவிட்டன. அதேநேரம் வசந்தகாலச் சிந்தனையாக மூன்று கிறித்தவ இலக்கிய நூல்களை ஆராய்வது நலமென நம்புகிறேன்.

சமய இலக்கியங்களால் தமிழ் வளர்ச்சி உயர்ந்து நிற்கிறது. ஒவ்வொரு காலகட்டத்திலும் படைக்கப்படும் நூல்களுள் பாட நூல்களைத் தவிர கதை, கட்டுரை நூல்கள் உரைநடையில் வீறுநடை போட்டு வருகின்றன. இவையெல்லாம் வசன நடையிலே செய்யப்படும் நூல்கள் என்பது மிகையன்று. அதே நேரம் செய்யுள் நடை இலக்கியத் தோற்றங்கள் மிக அருகியே காணப்படுகின்றன. அப்படிப் படைக்கப்படும் செய்யுள் இலக்கியங்கள், சமூகம், மானுடம் சார்ந்த நூல்களாக அமைவது மிக மிகக் குறைவே. சமய சார்பானவை புராணம், தல மகிமை சார்ந்தனவாகப் படைக்கப்படுகின்றன. இந்த எண்ணிக்கையும் அற்பமானதே. செய்யுள் நடைக் காப்பியங்களும் காவியங்களும் படைக்கப்படாத குறையைச் சமயஞ் சார்ந்த செய்யுள் இலக்கியங்கள் நிரவல் செய்து வருவதை நாமறிவோம்.

சமயம் இலக்கிய வடிவம் பெறும்போது அது மதக் காழ்ப்பைக் கடந்தே நிற்கின்றது. ஒரு சமய நூலை எடுத்துக்கொண்டால் அதிலுள்ள மதக் கருத்துகள் முன்னிற்பதில்லை. அவை பின்தள்ளப்பட்டு அப்படைப்பிலுள்ள தமிழின்பமே தலை எடுத்து நிற்கிறது. அதனால்தான் இசுலாம் மதஞ் சார்ந்த சீறாப் புராணம் பல சமயத் தமிழர்களால் படித்துச் சுவைக்கப்படுகிறது. கிறித்தவ மத தேம்பாவணி தித்திக்குந் தமிழாகத் திகழ்கின்றது. இறையிலி மதக் காப்பியங்களான சிலம்பு, மேகலை, சிந்தாமணி, சூளாமணி ஆதியன தமிழ்ப் பொக்கிசப் பெட்டகங்களாக மதிக்கப்படுகின்றன. நயந்து நுகரப்படுகின்றன.

ஒரு சிலையைப் பார்க்கும்போது அது செதுக்கப்பட்ட கல்லாகத் தோன்றுவதில்லை. அதுபோலத்தான் மத இலக்கியங்களில் உள்ள தமிழின்பம் அந்த மதக் கருத்தை மறைத்துவிடுகிறது. இத்தகைய வைணவ, பௌத்த, சைனமாதிய பாரத நாட்டு இலக்கியங்கள் தமிழில் ஆக்கம் பெற்றுள்ளன. அதேபோல பலத்தீன நாட்டில் தோன்றிய கிறித்தவ மதமும் அராபியாவில் தோன்றிய இசுலாம் மதமும்

கனடாவிலிருந்து.......... ஈழத்துப்பூராடனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சார்ந்த தமிழ் இலக்கியங்களும் சிறந்து நிற்கின்றன. இவற்றைப் படித்த எவரும் அதன் கருத்துகளின் ஆதிக்கத்துக்குட்பட்டதாகச் சரித்திரமே இல்லை! ஆயினும் அவற்றில் உள்ள தமிழ் நயம் அவற்றையும் விரும்பி மதிக்கச் செய்யும் மூல காரணியாக நிற்கிறது.

இவ்வசந்தகால இலக்கிய ஆய்வுக்கு கிறித்தவ மத இலக்கியங்களை எடுத்துள்ளோம். அவற்றுள் இத்தாலி மைந்தன் வீரமாமுனிவர் படைத்தளித்த 1.தேம்பாவணி (1777), 2.கிறித்தவ கம்பன் பாளையங்கோட்டை கிருட்ணபிள்ளை யாத்த இரட்சணிய யாத்திரிகம் (1894), 3.ஈழத்துப்பூராடனாரின் இயேசு புராணம் (1987) என்ற மூன்று இலக்கிய நூல்களை அவை தோன்றிய காலகட்டத்தின்படி வரிசைப்படுத்தி நூலாய்வு செய்வோம்.

இந்த மூன்று இலக்கிய நூல்களும் பலருக்கு அறிமுகமற்றவையே. அதுமட்டுமல்ல கிடைத்தற்கும் அரியனவே. இலங்கைப் பாடசாலைகளில் காலத்துக்குக் காலம் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், சீறாப் புராணம் ஆதியவற்றில் ஏதோ ஒரு பகுதியை மட்டும் பாடநூலாக ஏற்றுக் கற்பிக்கப்பட்டன. எனினும் இவற்றின் தமிழ் நடை தமிழ் கற்போர்க்கு இன்பம் மட்டல்ல தமிழறிவையும் வளர்க்கும் தகைத்தது. ஆகவே, கிடைத்தற்கரிய இந்தப் பனுவல்களைப் பற்றிய தகவல்களை முழுமையாக உங்கள் கரங்களில் இந்தப் படைப்பின் மூலங் கிடைக்கச் செய்கிறேன். அதேபோலப் பல பாடல்களும் பக்கங்களும் கொண்ட இவற்றை அவசரமான இந்தக் காலத்தில் படிக்க நேரமின்மை எனும் கால அருமையைப் போக்குமுகமாக; அவற்றின் சுவையும் தரமும் குறையாது, அவற்றை முழுமையாகக் கற்ற அறிவும் தகையும் கொண்டமனநிறைவு ஏற்படும் வகையில் சுருக்கி அளிப்பதில் பெருமிதம் கொள்கிறேன்.

என் இல்ல நூலகத்தில் இருந்த நூல்களில் கிறித்தவ இலக்கியங்கள் என்ற பகுதியிற் தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், இரட்சணிய சரிதம், இரட்சணிய அம்மானை, இயேசு காவியம் என்ற கிறித்தவ இலக்கியச் செய்யுள் நூல்களும், கனம் கிங்சுபரி அவரின் இயேசு பெருமானின் வாழ்க்கை, கனம் சின்னையா போதகர் அவர்கள் படைத்த ஒப்பிலாக் கிறித்துவும் உயர்திரு மறையும் ஆகிய உரைநடை நூல்களும் இடம்பெற்றிருந்தன.

இவற்றுள் உரைநடை நூல்களைத் தவிர்த்து நான்கு கிறித்தவ செய்யுள் இலக்கியங்களையும் நூலாய்வு செய்யலாம் என்ற எண்ணந் தோன்றியது. அதுவே இந்த நூலாக உருவெடுத்துள்ளது. இவற்றுள், தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் ஆகிய இரண்டு நூல்களையும் இட்டுப் பலர் ஆய்வு செய்துள்ளனர். அவற்றில் செறிந்துள்ள தமிழ் வளம், இலக்கிய இன்பம், மதக் கருத்துகளின் வண்ணம் பற்றிய பல கட்டுரைகள், ஆய்வு நூல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. எனினும் இவை கிறித்தவ மதநூல்களாக இருப்பினும் இவற்றை கிறித்தவ மதவாழிபாட்டுக்காகக் கைக்கொள்வதில்லை.

ஒரோபோது மதப் பிரசாரங்களில் மட்டும் எடுகோளாக எடுத்தாளப்படுவதுண்டு. இதனால் கிறித்தவர்களாலேயே மறக்கப்பட்ட நிலையில் அவற்றில் உள்ள தமிழின்பங் காரணமாக தமிழ் இலக்கியங்களாகப் படிக்கப்படுகின்றன, பேணப்படுகின்றன. அதுவும் இந்த நூல்களையிட்டு இலக்கிய வரலாறுகளிற் கூடத் தக்க தகவல்கள் தரப்படாததால் இவை இலைக்குள் மறைந்திருக்கும் இனிய சுவைதரு பழமாக இருந்தாலும் காய்களாகக் கண்ணிற்குத் தோன்றுகின்ற இயல்புக்குள் தள்ளப்பட்டுள்ளன. மேலும் இவை சமய இலக்கியம் என்று முத்திரையிடப்பட்ட காரணத்தால் இலவம் பழமாக எள்ளப்படுவதுண்டு. ஆனால், இவற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்தவர்களின் ஆற்றலும் அவர்கள் இவற்றில் கையாண்டுள்ள தமிழ் அழகு நடையும் எவராலும் மறுக்கப்பட்டாலும், மறைக்கப்படினும் எத்தனை காலஞ் சென்றாலும் காலாவதியாகா நிலைத்துக் கால ஓட்டத்தில் தலை நிமிர்ந்து நிற்கின்றன. மினுக்க மினுக்க ஒளிருந் தங்கம்போல இலக்கிய உலகில் இலங்கி வருகின்றன. எனவே இவைகளைச் சமயக் காழ்ப்பின்றி தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்துவது தலையாய கடன் என எண்ணுகின்றேன். இந்தத் துணிவே இந்த நூற்படைப்பிற்குக் காரணமாக மலர்கின்றது. இவற்றுள்

1. தேம்பாவணி
2. இரட்சணிய யாத்திரிகம்
3. இயேசு புராணமாதிய மூன்றையிட்டு ஆய்வு

செய்யும்போது மேலும் பல தகவல்களையும் இலக்கியச் சுவை, தமிழ்நடை, கவிநயம் ஆதியவற்றைப் பற்றியுங் கூறுவேன். தவிர இந்த நூல்களின் கருதுகோளான மதத் தத்துவங்களை இட்டு ஆய்ந்துரைத்து மத உணர்வை ஏற்படுத்தவோ, மதக் காழ்ப்புணர்வை உண்டாக்கவோ அன்றி மதக் கருத்துகளில் ஆய்வு செய்யவோ முயலப்போவதில்லை. எனவே நேயர்கள் இலக்கிய இன்பம் தமிழ் வளம் பெறும் நோக்கத்துடனேயே இவ்வாய்வினை அணுகும்படி இலக்கியப் பண்புடன் கேட்டுக்கொள்கிறேன். இது ஒரு நூல் விமர்சனம் அன்று இலக்கிய நூலாய்வு என்று கூறிக்கொள்ளவும் விரும்புகிறேன்.

– தொடரும் –

# அருள் சகோ. கலாநிதி. பப்ரிஸ்ற் குரூஸ் அவர்கள் காலமானார்

இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையின் சிறந்த கல்விமான்களில் ஒருவரும், பன்மொழி வித்தகரும் பன்னூல் ஆசிரியரும் மனித உரிமை ஆர்வலரும் பண்பாளருமான அருள்சகோதரர் கலாநிதி பப்ரிஸ்ற் குரூஸ் அவர்கள் கடந்த மார்ச் மாதம் 23ம் திகதி காலமானார்.

டிலாசால் துறவற சபையைச் சேர்ந்த இவர் மன்னார் மறைமாவட்டத்தின் வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

பன்மொழிப் புலமை மிக்க இவர் உருது, பஞ்சாபி, இந்தி ஆகிய இந்திய மொழிகளிலும் ஆங்கிலம், பிரெஞ்ச், ஜேர்மன் ஆகிய ஐரோப்பிய மொழிகளிலும் சிறந்த புலமை மிக்கவர். இத்தாலியம், ஸ்பானியம் ஆகிய மொழிகளிலும் ஓரளவு தேர்ச்சியுடையவர்.

சிறந்த எழுத்தாளராகவும் விளங்கிய இவர் உருது மொழியில் மூன்று நூல்களையும் ஆங்கில மொழியில் ஐந்து நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

மெசஞ்சர், டெய்லி நியூஸ், டெய்லி மிறர், தி ஐலண்ட் போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளில் இன்றைய அரசியல், சமூகச் சூழ்நிலைகளுக்கேற்ப ஆழ்ந்த கருத்துகளடங்கிய பல்வேறு ஆக்கங்களை எழுதி வந்தார். இவருடைய இறுதிச் சடங்குகள் அவருடைய சொந்த ஊரான வங்காலையில் இடம்பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லிடப் பேசிகள் சொல்லும் சேதிகள்



கடந்த காலங்களில்...
கால்கடுக்க நடந்துசென்று
ஒரு சேதி
ஒருவரைச் சென்றடைய
ஒரு நாழிகை - அல்ல
ஒரு மாதமும் ஓடிவிடும்
இப்போது அப்படியா...!
கண் மூடித் திறப்பதற்குள்
காணும் இடமெல்லாம்
தினமும் ஒரு
தொலைபேசிச் சேவை!!
எல்லோர் காதுக்கருகிலும்
புதிது புதிதாய் மின்னும்
கையடக்கத் தொலைபேசிகள்
உலகம் நம் உள்ளங்கைகளில்
உருச்சிறுத்து உருளும்
விவசாயி முதல் விஞ்ஞானி வரை
குழந்தை முதல் வயோதிபர் வரை
வேறுபாடுகளின்றி விளையாடும்
விஞ்ஞான உலகம்!!!
வேடிக்கை என்னவென்றால்
செல்போன்கள் சிலருக்கு
பொழுது கழிய அரட்டையடிக்க
பலருக்குப் பெஷன்
சிலருக்கு வியாபாரம்
விரைவாய்ப் பணிகள் முடிய
அறிவைத் தேட - என்று
பரந்து செல்லும் தேவைப்பாடுகள்
யாரும் இதற்கு விதிவிலக்கல்ல
விரைவாய் முடியும்
அன்றாடப் பணிகளால்
நன்மைகளை உணர்ந்த நாம்
நம்மைத் தேடிவரும் தீமைகளை
அறிந்தும் அறியாமலும்
அப்படியே இருந்துவிட்டோம்
முடிந்தவரை...
நன்மைகளை அடைந்து
இயன்றவரை...
தீமைகளை அகற்றி
எதிர்கால சந்ததியினரின்
வளமான வாழ்விற்கு
நல்லெண்ணங்களை விருட்சங்களாய் வித்திடுவோம்

**- வ. சுரேஸ்கண்ணா -**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவுலின் காலத்து உலகம்



பவுலின் காலத்து உலக சமுதாயத்தை பட்டினக் கால சமுதாயமாகவும் அக்காலத்து கிரேக்கத் தத்துவ ஞானத்தையும் அக்காலத்துச் சமயங்களின் ஒரு பகுதியாக இருந்த சாதாரண மக்களுக்கு விளக்கமுடியாத Mystery Religions எனப்படுகின்ற மக்களின் பின்னணியிலும் நாம் ஆரயவேண்டும். பவுலின் காலம் கி.பி 10 அல்லது 15 முதல் அண்ணளவாக 65 ஆண்டுகாலம் எனக் குறிப்பிடலாம். துல்லியமான வரலாற்று ஆய்வுகள் நமக்கு இன்னும் கிடைத்தில. பவுலின் காலத்துப் பட்டினக் காலத்து வகுப்புகளைப் பற்றி நாம் பின்வருமாறு குறிப்பிடலாம்.

சமூகப் படிநிலைகளின் உயர்நிலைகளை அடைவது அவ்வளவு எளிதாக அக்காலத்தில் இருக்கவில்லை.

உரோம சாம்ராஜ்யம் ஏறக்குறைய கி.மு 63ம் ஆண்டளவில் வளர்ச்சி பெறத் தொடங்கியது. அவ்வரசு அதற்கு முன்னைய காலத்துச் சமய, கலாசார, அரசியல் சிந்தனைகளையும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் பெருமளவு ஏற்றுக்கொண்டது. கி.பி 4ம் நூற்றாண்டளவில் கிறிஸ்தவ சமயத்தை சாம்ராஜ்ஜியத்தின் சமயமாக ஏற்றுக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமும் உரோம சாம்ராஜ்யத்துக்கு ஏற்பட்டது. இது வரலாற்றின் விளைவுகளாகும். சமய ரீதியாக அரசியல் ஒற்றுமையைப் பேணவேண்டிய ஒரு காலம்.

உரோம சமுதாய வகுப்பைப் பொறுத்த வரையில் உரோம அதிராஜ்ஜியத்தில் முக்கிய குடும்பஸ்தர்களே பிரித்தெடுக்கப்பட்ட, தெரிந்துகொள்ளப்பட்ட அதியுயர் வகுப்புகளாக இருந்தனர். இங்கு நாம் சாதி அடிப்படையிலின்றி சமூக அந்தஸ்து என்ற வகையில் வரலாற்று ரீதியாகச் சமூகத்தை எண்ணிப் பார்க்கின்றோம். இந்த உரோம அந்தஸ்து வாய்ந்த உயர்குடி மக்களே நிர்வாகிகள் ஆகவும் உரோம சாம்ராஜ்ஜியத்தின் பல்வேறு படைத் தளபதிகளாகவும் விளங்கினர்.

2வது சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டவர்கள் பிரபுக்கள் வர்க்கத்தைச் சேர்ந்த நிலச்சுவாந்தார்களும் உற்பத்தி வியாபாரத் துறையில் மூலதனம் படைத்தவர்களாகவும் இருந்தனர்.

சிறுநிலச் சொந்தக்காரர்களும் இவர்கள் சிறு நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாகவும் தொழில் வினைஞர்களாகவும் கடைகள் வைத்திருப்பவர்களாகவும் இருந்தனர். , ejj ;J i wapNy Na / அந்தஸ்திலேயே புனித பவுலை உள்ளடக்கலாம். அவர் தொழில் அதிபர், கூடாரம் (டெண்டுகள்) செய்பவர். மக்கள் இடப்பெயர்ச்சிக்கு அல்லது உல்லாசப் பயணங்களுக்கு இந்தக் கூடாரங்கள் பெரிதும் பயன்பட்டிருக்கலாம். இது அக்கால வாழ்க்கை முறையையும் ஓய்வு நேரப் பயன்பாட்டையும் நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

இதற்கு அடுத்தபடியாக நாம் அக்கால சமுதாயப் படிமுறைகளில் சுதந்திர ஆண்களையும், பெண்களையும் பார்க்கின்றோம். அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து சுதந்திரமடைவதைக் காண்கின்றோம். அக்கால அடிமைகளும் போரின் விளைவாகக் கைப்பற்றப்பட்டவர்களும் வேட்டையாடி அடிமைகளைச் சேகரிப்போர் குழுவினாலும், கடன் தொல்லையாலும் அடிமையாக்கப்பட்டனர். பிள்ளைகள் அல்லது குழந்தைகள் உரோம சாம்ராஜ்ஜியத்தின் அடிமைத் தளையை ஆதாரமாகக் கொண்டவை. இங்கே சமூகப் பெயர்ச்சிக்கு இடமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் மிருக நிலையில் அடிமைகளாக வைக்கப்பட்டனர். இவர்கள் பண்ணைகளிலும் சுரங்கங்களிலும் கட்டிட நிர்மாணங்களிலும் பணியாற்றினர்.

வேறு சில அடிமைகள் குடும்பங்களில் பணியாற்றினர். அவர்கள் தம் எஜமான்களோடு பிரயாணங்களிலும் ஈடுபட்டனர். அவர்களது எஜமான்கள் அவர்களுக்கு சகல பாதுகாப்பையும் வழங்கினர். ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்து அவர்கள் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை பெறவும் முடியும்.

இதனாலேயே புனித பவுல் சமுதாயத்திலிருந்த மிகக் கொடூரமான அடிமைத் தனத்தைப் பற்றி அதிகம் பேசவில்லை. ஆனாலும் எஜமானுக்கும் அடிமைகளுக்கும் இருக்கவேண்டிய உறவுகளைப் பற்றி எடுத்துரைக்கின்றார். இறுதியில் அடிமைத் தளையை நீக்குவதே பவுலின் நோக்கம்.

இக்கால உரோம சமுதாயத்தில் பெண்கள் இரண்டாம் நிலையிலேயே தள்ளப்பட்டனர். அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணி, வீட்டு வேலைகளே. சிறு சந்தர்ப்பங்களிலேயே அவர்கள் உயர் நிலைக்குச் செல்லும் வாய்ப்புகளும் இருந்தன. இப்படி சமுதாய உயர்ச்சி பெற்றவர்களும் இவரின் காலத்தில் இருந்தனர். இவரின் இல்லங்கள் புதிதாக மதம் மாறியவர்களுக்குப் புகலிடமாகவும் அமைந்திருந்தது. எனினும் பவுலின் காலத்தில் ஆண் ஆதிக்கமும் அதிகம் இருந்தது. கிரேக்க உரோம சமுதாயத்தை விட கிறிஸ்தவ சமுதாயத்தில் பெண்களுக்கு உயர் அந்தஸ்துக் கிடைத்தது.

**- கலாநிதி. அருட்திரு. எஸ். ஏ. ஐ. மத்தியு F.C -**

# கடுகுக் கதை 16 பிள்ளைக் கடன்

அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை! மத்தியானம் சாப்பிட்டுவிட்டு பிள்ளைகளுடன் தொலைக் காட்சி பார்த்துக்கொண்டிருந்தார் அந்தோனி. நேரம் பிற்பகல் 1.30 மணி. வீட்டு வாசலில் 'ஐஸ்கிறீம் ஓட்டோ' ஒன்று பாட்டுப் போட்டபடி நின்றுகொண்டிருந்தது. போவான், போவான் என்று பார்த்தால் அவன் அசைவதாகவே தெரியவில்லை. சம்பளத்திற்கு இன்னும் இரண்டு நாள் உண்டு.

கடைசி மகன் அந்தோனியிடம் "அப்பா ஐஸ்கிறீம்" என்று நச்சரித்துக்கொண்டிருந்தான். அவனுக்கு வயது ஐந்து.

"மகனே.. கையில காசில்ல... வாற ஞாயிறு வாங்கித் தாறன்..." என்று சொன்னார் அந்தோனி.

"அப்போவ்! அம்மம்மா எனக்குத் தந்த நூறு ரூபா இருக்கு. அதில வாங்கித்தாங்க" என்று ஓடிப் போய் புது நூறு ரூபாய்த் தாளைக் கொண்டுவந்து கொடுத்தான்.

அந்தோனி எல்லோருக்கும் ஐஸ்கிறீம் வாங்கிக் கொடுத்தார்.

பி.ப 2.30 மணி - அந்தோனியிடம் கடைசி மகன் வந்தான்.

"அப்பா......!"

"என்ன மகன்..?"



"அந்த நூறு ரூபாவத் தாங்க..."

"எந்த நூறு ரூபா..?"

"ஐஸ்கிறீம் வாங்கின காசு.."

ஓவென்று அழத் தொடங்கினான் அவன். "பேங்கில கடன் வாங்கியிருக்கன், பிரண்டுட்ட கடன் வாங்கியிருக்கன் ஆனா புள்ளகளிட்ட மட்டும் கடன் வாங்கப்படாது..." என்று நினைத்தவாறு தலையில் கை வைத்துக்கொண்டார் அந்தோனி

**- பற்றி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சூரிய நமஸ்காரம்





நிலை - 05

நிலை - 04

• இடது காலைப் பின்நோக்கிக் கொனர்டுவந்து உடலை வளையாமல் நேராக ஒரே நேர்கோட்டில் வைக்கவும்.

• உள்ளங்கைகளை ஊன்றி நிமிர்ந்து பார்க்கவும்.

• இந்நிலையில் உங்கள் உள்ளங்கைகளும் கால் நுனி விரல்களும் தரையைத் தொட்டபடி இருக்கும்.

• உங்கள் தலையிலிருந்து பாதம் வரை உங்கள் உடல் 30⁰ சாய்வாக இருக்கும்.

• இப்பயிற்சி செய்யும்போது முச்சை முழுவதுமாக வெளியேற்றவும்.

• இரண்டு முட்டிகளையும் தரையின் மீது வைத்து உடம்பைப் பின்நோக்கிக் கொண்டுவந்து குதிகால் மீது உட்காரவும்.

• உள்ளங்கைகளை அப்படியே வைத்தவாறு நெற்றிப்பொட்டைத் தரையில் வைத்து ஓய்வு எடுக்க வேண்டும்.

• முட்டிகளை மடக்கி உடலைப் பின்பக்கமாகக் கொண்டு செல்லும்போது மூச்சை உள்ளிழுக்க வேண்டும். பின் சாதாரண சுவாசத்திற்கு வரவும்.

• இது சஷாங்காசன நிலையாகும்.

**மேலதிக ஆலோசனை பெற 0775282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.**

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar (India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது முயற்சியாண்மையானது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியினை நிர்ணயிக்கும் பிரதான காரணியாக மாறியுள்ளது. இன்றைய காலகட்டத்தில் ஆண், பெண் என்ற பாகுபாடின்றி அனைவரும் யாதாயினும் ஒரு தொழிலில் ஈடுபடுகிறார்கள். பொருளாதார நெருக்கடிகள், துரித கதியில் அதிகரித்து வரும்



# பெண்களும் முயற்சியாண்மையும்

விலைவாசிகள் என்பவற்றுக்கு முகம் கொடுத்து, இறுக்கமான சூழ்நிலைகளிலிருந்து விலகி தம் வாழ்க்கையைக் கொண்டு நடத்த ஏதாயினும் ஒரு தொழில் முயற்சியில் ஈடுபடுவது அவசியமாகிறது. முன்னர் வீடு, குடும்பம், சமுதாயம் எனப் பல வெளிச்சூழல் காரணிகளைக் கருத்தில் கொண்டு வீட்டினுள்ளே முடங்கிக் கிடந்த பெண்கள் தற்போது பல தொழில்களில் தலைமை தாங்கி நிற்பது நாம் அறிந்ததே. பல சவால்களின் மத்தியிலும் தொழில் துறையில் பெண்களின் பங்களிப்பு தற்போது அதிகரித்து வருவதனை நாம் காணமுடிகிறது.

இலங்கையைப் பொறுத்த மட்டில் ஆடை வடிவமைப்பு (Dress Making), சிகையலங்காரம் (Hair Dressing), முக அழகுச் சிகிச்சை (Facial), பூச்செடி வளர்ப்பு (Floriculture), செடி உற்பத்தி (Plant Nursesy), செயற்கைப் பூச்செடி / கொத்து வகைகள் தயாரிப்பு (Bouquet), கை வேலைப்பணிகள் (Handicraft), துரித உணவு வகைகள் தயாரித்தல் (Fast Food Items), வெதுப்பல் உணவுகள் (Baked Foods), கேக் வகைகள் தயாரிப்பு (Cake Icing), தொட்டி மீன் வளர்ப்பு (Fisheries), பதப்படுத்தல் / வற்றல் உணவு உற்பத்தி (Preservation of Goods), அழகிய மட்பாண்ட உற்பத்திகள் போன்ற தொழில்களிலும் இது தவிர தேனீ வளர்ப்பு, பட்டுப் பூச்சி வளர்ப்பு போன்ற தொழில் முயற்சிகளிலும் அனேக பெண்கள் ஈடுபடுகின்றனர். இது நாட்டில் நிலவுகின்ற வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்க உதவுவதோடு, உள்ளூர் வளங்களைப் பூரணமாகப் பயன்படுத்துதல், வறுமையைக் குறைத்தல், அந்நியச் செலாவணியினை உழைத்தல், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல் போன்ற பலாபலன்களையும் ஈட்டித் தருகின்றது. இது ஒரு நாட்டின் வளர்ச்சிக்குப் பெண்களது பங்களிப்பு அதிகமாகவுள்ளது என்பதனைப் புலப்படுத்துகிறது.




பல வழிகளிலும் நன்மை ஈட்டித் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தொழிற்படும் 90 சதவீதமான சிறு தொழில் முயற்சிகள் 2-5 வருடங்களில் பின்வரும் பொதுவான பிரச்சினைகளை எதிர்நோக்கி இறுதியில் தோல்வி காண்கின்றன. பொருத்தமற்ற இட அமைவு, ஆற்றல் குறைந்த போதிய அனுபவமற்ற முயற்சியாளர், மூலதனப் பிரச்சினை, முறையாகத் திட்டமிடாமை, மூல வளங்களைப் பெறுவதில் ஏற்படும் சிக்கல்கள், ஆற்றல் மிக்க முகாமையாளர்களும் ஊழியர்களும் இல்லாமை, சூழல் ஆய்வுகளை மேற்கொள்ளாமையும் மாற்றங்களுக்கு முகங்கொடுக்க முடியாமையும், சவால்களை எதிர்கொள்ள விரும்பாமையும் மாற்றங்களை விரும்பாமையும், வாடிக்கையாளர், வழங்குனர், அரச அதிகாரிகளுடன் நெருங்கிய நல்லுறவைப் பேணாமை, சரக்கிருப்புக் கட்டுப்பாட்டை ஒழுங்காகப் பேணாமையால் ஏற்படும் அதிகூடிய செலவுகள், கூடியளவு மூலதனங்களை நிலையான சொத்துகளில் முதலிடுவதால் மூலதனம் முடக்கப்படல், குறைவான விற்பனை, பிழையான மனோபாவங்களும் அதிகரித்து வரும் குற்றச் செயல்களும், திட்டமிட்டு தொழில் முயற்சியை விஸ்தரிக்காமை, பலவிதமான போட்டிகள்.

இவை அனைத்து முயற்சியாளர்களும் எதிர்நோக்குகின்ற பொதுவான பிரச்சினைகளாயினும் பெண் முயற்சியாளர்களை நோக்குவோமாகில் தமது தொழில் முயற்சிகளினை ஆரம்பிக்கும்போதும் அதனைக் கொண்டு நடாத்தும்போதும் பல இடர்ப்பாடுகளை எதிர்கொள்ள நேரிடுகின்றது. அவையாவன: குடும்பப் பொறுப்பு அதாவது திருமணமான பெண்கள், குழந்தைகள், கணவர், வீடு என குடும்பப் பணிகளை நிறைவேற்றவே அவர்களுக்கு நேரம் போதுமானதாகவுள்ளது. அனேக குடும்பங்களில் பெண்கள் வேலைக்குச்





செல்வது அக்குடும்பத்தினாலும் சமூகத்தினாலும் விரும்பப்படாதவொன்று. இதனால், தொழிலை மேற்கொள்ள, அவர்களது உறவினர்களது ஆதரவினைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. இன, மத, கலாசாரக் கட்டுப்பாடுகளும் பெண்கள் சுயமாகவும் சுதந்திரமாகவும் தொழிற்படுவதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. வாடிக்கையாளர், வங்கி, வழங்குனர் போன்ற சமூகத்தின் பல்வேறு கட்சியினருடனும் ஏற்படுத்திக்கொள்ளும் தொடர்பு வணிகத்தின் வளர்ச்சிக்குப் பேருதவியாக இருக்கும் போதிலும் ஒரு பெண் முயற்சியாளரை எடுத்துக்கொண்டால் இது அவர்களது பெயருக்கு அவதூறு ஏற்படுத்தவும் வாய்ப்பாக உள்ளது. தொழிலை ஆரம்பிப்பதற்கும் கொண்டு நடாத்துவதுக்கும் விஸ்தரிப்பதற்குமான நிதியினைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு ஆண்களை விடப் பெண்களுக்குக் குறைவாகவே காணப்படுகிறது. மற்றும் பயிற்சி, தொழில்நுட்ப அறிவு என்பவற்றைக் குறைவாகவே கொண்டுள்ளனர். சந்தை நிலவரம் தொடர்பான பூரண தகவல் கிடைப்பனவுகளின்மை காரணமாக சந்தைக் கேள்வி, நிரம்பல், இடைநடுவர்கள் போட்டி நிலைமையறிந்து செயற்பட முடியாத காரணத்தினால் சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதிலும் கடினமாகவுள்ளது.

எனவே, பெண் முயற்சியாளர்கள் தமது தொழிலைத் திறம்பட மேற்கொள்வதற்கு சில விசேட பண்புகளைக் கொண்டிருத்தல் அவசியமானதாகும். முயற்சியாண்மை எனும்போது நாம் இலாப நட்டங்களை எதிர்வு கூறமுடியாது. அங்கு இலாபமோ நட்டமோ ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, அநிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்ளக்கூடியவராக இருத்தல் வேண்டும். ஓரிரு தடவைகள் ஏற்படும் நட்டத்தினை வைத்துக்கொண்டு முயற்சியைக் கைவிடாது தொடர்ந்து நடாத்திச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லவேண்டும். தோல்விகள், பின்னடைவுகள் ஏற்படும்போது அவற்றை ஒரு நல்ல அனுபவமாக எடுத்துக்கொண்டு சந்தர்ப்ப சூழ்நிலைகளை (வாய்ப்புகளை) இனங்கண்டு செயற்படக் கூடியவராக இருத்தல் வேண்டும். தன்னைத் தானே உற்சாகப் படுத்துபவராகவும் தன்னம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும். இன்றைய உலகு மாற்றங்கள் மிகுந்ததாகவும் உலக மக்கள் மாற்றங்களை விரும்புகின்றவர்களாகவும் உள்ளனர். எனவே, புதியன புனைதலினூடாக மாற்றங்களை ஏற்படுத்துபவராக இருத்தல்வேண்டும். கடின உழைப்புடன், எப்போதும் தனது தொழில் தொடர்பான சிந்தனையுடன், அதனைக் கட்டியெழுப்பும் நோக்குடன் அயராது உழைப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். சுயமாக சிந்தித்துச் செயற்படல் அதாவது, பிறரில் தங்கியிராது தமது விருப்பிற்கேற்ப தீர்மானங்களை மேற்கொள்பவர்களாகவும் முடிவுகளை எடுப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாறு இவற்றைத் திட்டமிட்டு, ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவார்களாயின் இச்சவால்களுக்கு முகம் கொடுத்து போட்டிமிகு சூழலில் வெற்றி காணமுடியும்.

மேலும் பின்வரும் வழிமுறைகளைக் கையாள்வதன் மூலமாக பெண்கள் தமது முயற்சியாண்மையில் அதிகபட்ச வெற்றியினை அடைந்துகொள்ள முடியும்.

- **பெண்கள் தங்கள் வியாபார நிறுவனத்தினை இல்லம் சார்ந்ததாக** (Home based Business) **அமைத்துக்கொள்வதன் மூலமாக சிறந்ததொரு பங்களிப்பினை வீட்டிற்கும் மற்றும் வியாபாரத்திற்கும் வழங்க முடியும்.**

- **பெண்கள் போதியளவான கல்வி அறிவினையும், தொழிற் பயிற்சி அனுபவங்களையும் பெற்றுத் தன்னம்பிக்கையினைக் கட்டியெழுப்புவதன் மூலமாக ஆண்களுக்கு நிகரான தொழில் துறையிலும் பிரகாசிக்க முடியும்.**

- **ஒரு பெண் முயற்சியாளர் தனது உற்பத்திப் பொருட்கள், சேவைகளின் தரம், போட்டித்தன்மை தொடர்பான சந்தை ஆய்வுகளினை மேற்கொள்வதன் மூலமாகத் தமது பொருட்கள், சேவைகளுக்கான கேள்வி, விலை, போட்டித்தன்மை போன்றவைகளை அறிந்து அவற்றிற்கு ஏற்ற வகையில் உற்பத்தி நடவடிக்கைகளினை மேற்கொள்தல்.**

- **பொருட்களுக்கான சிறந்த விற்பனை மேம்படுத்தல்களினை** (Sales Promotion) **அதாவது பிரபலப்படுத்தல்** (Publicity), **விளம்பரப்படுத்தல் மூலமாக உற்பத்திப் பொருட்கள் தொடர்பான சிறந்த அறிமுகத்தினை வழங்கலாம்.**

- **நிதி முகாமைத்துவம்** (Financial Management) **மற்றுமொரு பிரதான அம்சமாகும். தமது உற்பத்தி, விற்பனை, வருமானம், செலவீனம் போன்றவற்றிற்கான மூல ஆவணங்களைப் பேணுதல் அவசியமானதாகும்.**

- **குறித்ததொரு வியாபார முயற்சியினை ஆரம்பிப்பது, கொண்டு நடாத்துவது தொடர்பான சிறந்த திட்டமிடல்களை மேற்கொள்வது அவசியமாகும்.**

இத்தந்திரோபாயங்களைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும் பெண் முயற்சியாண்மையின் வெற்றியானது அவர்களது சமூக அந்தஸ்தினை உயர்த்தி, பொருளாதார ரீதியான முன்னேற்றத்தினை வழங்குவது மட்டுமல்லாது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் உறுதுணையாக அமையும்.

**- டிலக்ஷி.ம**
**கிழக்குப் பல்கலைக்கழகம் -**

## குருக்கள் ஆண்டு பிரகடனம்

திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் 2009 ஜுன் மாதம் 19ம் திகதி முதல் 2010 ஜுன் 19ம் திகதி வரையிலான காலப்பகுதியை அனைத்துலக குருக்கள் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். குருக்களின் பாதுகாவலராகிய புனித யோன் வியன்னி அவர்களின் இறப்பின் 150வது ஆண்டு நிறைவையொட்டி திருத்தந்தை இதனை அறிவித்துள்ளார். "கிறிஸ்துவின் பிரமாணிக்கம், குருக்களின் பிரமாணிக்கம்" என்ற கருப்பொருளில் அனுசரிக்கப்படவிருக்கும் இக்குருக்கள் ஆண்டினை வத்திக்கான் புனித பேதுரு பேராலய சதுக்கத்தில் திருத்தந்தை ஆரம்பித்துவைப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' 'நர்மா பைவர் இன்டஸ்ரீஸ்' உரிமையாளர் திரு. கே. திருச்செல்வம் அவர்களைச் சந்தித்தோம். இவரைச் செவ்வி காணவேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டதும் ஒரு வித்தியாசமான அனுபவந்தான். கன்னாரிழை (பைவர்) தொடர்பான பயிற்சிநெறி ஒன்று மட்டக்களப்பு கடற்றொழில் மற்றும் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் நடைபெற்றது. அப்பயிற்சிநெறியில் 'நர்மா பைவர் இன்டஸ்ரீஸ்' தொழிலாளர்களும் பங்குபற்றினர். அவர்களின் தொழிற் பக்தியும் அவர்கள் தங்கள் நிறுவன உரிமையாளர் பற்றிச் சொன்ன மதிப்பான வார்த்தைகளும் எம் காதுகளுக்கெட்டின. எனவே அவரைப் பேட்டி காண விழைந்தோம். முன்னர் இந்நிறுவனம் கல்லடி மணிக்கூட்டுக் கோபுரத்தை அண்மித்ததாக அமைந்திருந்தது. ஒருநாள் முற்பகல் பத்து மணியளவில் அவரைச் சந்தித்தோம். உயரம் குறைவான, எளிமையான அறையொன்றில் மிகமிக எளிமையாக அவர் அமர்ந்திருந்தார்.

**உங்கள் நிறுவனம் பற்றிக் கேள்விப்பட்டோம். அது தொடர்பாக 'தொண்டனுக்கு' பேட்டி காண வந்துள்ளோம்.**

வணக்கம்! வாருங்கள்! நல்லது; மிகவும் மகிழ்ச்சி.

**உங்கள் தொழில் முயற்சியாண்மை பற்றிச் சற்றுக் கூறுவீர்களா?**

ஆம்! ஆரம்பத்தில் அதாவது 1984ம் ஆண்டில் இரும்பு தொடர்பான தொழில் முயற்சியை மேற்கொண்டிருந்தேன். அவ்வேளையில் கன்னாரிழையில் கதிரைகள் செய்வதற்கான அச்சுகள் சில விற்பனைக்கு வந்தன. அவற்றை வாங்கினேன். பின்னர் ஒரேயொரு தொழிலாளியின் உதவியுடன் 'பைவர்' கதிரைகள் செய்யத் தொடங்கினேன். அவற்றுக்கு நல்ல கேள்வி இருந்தது. இன்னமும் அக்கதிரைகள் உறுதியாக உள்ளன. (கதிரையொன்றைக் காட்டுகிறார்)

**அப்படியானால் மீன்பிடிக் கலங்களை எப்போது உற்பத்தி செய்யத் தொடங்கினீர்கள்?**

1989ம் ஆண்டு ஆற்றுத் தோணியொன்றை கன்னாரினாற் செய்தோம். அது உடனடியாக விற்பனையாகவில்லை. ஆறு மாதங்களின் பின் அதாவது 1990ம் ஆண்டிலேயே அதனை விற்கக்கூடியதாய் இருந்தது. எனினும் முயற்சியைக் கைவிடவில்லை. இன்னொரு பைவர் வேலை தெரிந்த தொழிலாளர் ஒருவரை திருகோணமலையிலிருந்து கொண்டு வந்தோம். அக்காலகட்டத்தில் வெளி மாவட்டங்களில் இருந்தும் 'பைவர்' தோணிகள் வரத்தொடங்கின. எனவே, எமது உற்பத்திகள் தரமும் உறுதியும் பாவனையும் உள்ளதாக இருக்கவேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தோம். அதில் வெற்றியும் பெற்றோம். எமது மீன்பிடிக் கலங்களை மீன்படி அமைச்சு அங்கீகரித்து தரச் சான்றிதழையும் வழங்கியது. கடற்றோணிகள், ஆற்றுத் தோணிகள் என்பனவற்றை மூன்றுக்கும் மேற்பட்ட வெவ்வேறு மாதிரிகளில் (மொடல்களில்) தயாரித்து சந்தைப்படுத்தினோம்.

**பெரிய வகையான மீன்பிடிக் கலங்களை உற்பத்தி செய்வதுண்டா?**

ஆமாம்! 1998ம் ஆண்டில் 21.5 அடி நீளமான வள்ளங்களைத் தயாரிக்கத் தொடங்கினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் 19.5 அடி நீளமான 'என்ஜின் போட்டு'களைத் தயாரித்தோம். இவற்றைத் தயாரிக்க சுமார் ஐந்து தொடக்கம் பத்து நாட்கள் வரை எடுக்கும்.

**இவற்றுக்கான அச்சுகளிற்கு என்ன செய்வீர்கள்?**

அச்சுகளைப் பெரும்பாலும் நாங்களே செய்வதுண்டு. 2006ம் ஆண்டில் 30 அடி நீளமான மாதல் (Madal) வள்ளமொன்றைச் செய்தோம். அதனை வாங்கியவர்களுக்கு முதல் நாளிலேயே ஒன்பது இலட்சம் ரூபாவிற்கு அறுக்குளா மீன் அறுவடையாகக் கிடைத்தது. 2008ம் ஆண்டு 32 அடி நீளமான Multi days Boat என்றழைக்கப்படும் பல நாட்கள் கடலில் தங்கி நின்று மீன் பிடிக்கக்கூடிய பாரிய கடற் கலங்களைத் தயாரிக்கத் தொடங்கினோம். இயந்திரம் இல்லாமல் அதன் விலை பதினாறு இலட்சம் ரூபா. இதில் மூன்றினை 'எகெட்' நிறுவனம் வாங்கியுள்ளது.

**இவற்றைத் தயாரிப்பதற்கான மூலப் பொருட்கள் எவை? அவற்றை எங்கே பெற்றுக்கொள்கின்றீர்கள்?**

Resin, Mat, Catlist, Pigment என்பனவையே பிரதான மூலப் பொருட்கள். இவற்றைக் கொழும்பில் வாங்குகின்றோம்.

**தற்போது இத்துறையில் எத்தனை தொழிலாளர் உங்களிடம் வேலை செய்கின்றனர்?**

பதினெட்டுப் பேர் என்னிடம் வேலை பார்க்கின்றார்கள். அவர்களுக்கு அவ்வப்போது பயிற்சிகள் வழங்குவதுண்டு. சுனாமியின் பின் எமக்கு அதிகரித்த கேள்வியின் காரணமாக அதிகளவான மீன்பிடிக் கலங்களை சந்தைப்படுத்த நேர்ந்தது. பெறப்பட்ட இலாபத்தின் கணிசமான பங்கினை மனமகிழ்வுடன் அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தோம்.

**உங்களின் தொழில் தொடர்பான வெளிநாட்டுப் பயண அநுபவங்கள் ஏதும் கிடைத்ததுண்டா?**

ஆம்! ஜேர்மன் நாட்டுக்குச் சென்ற 12 தொழில் முயற்சியாளர்களில் ஒரேயொரு சிறுபான்மையினத்தவனாக நான் தெரியப்பட்டிருந்தேன். அங்கு பல்வேறு 'பைவர்' தொழிற்சாலைகளுக்குச் சென்று பயன் பெற முடிந்தது. பின்னர் சீனாவுக்கும் சென்றேன்.

**உங்கள் தொழில் தொடர்பாக வாசகர்களுக்குச் சொல்ல விரும்புவது என்ன?**

முயற்சியுடன் உழைப்பும், தரமும், இறை பக்தியும் இருந்தால் எவரும் எதிலும் முன்னேறலாம்.

**நீங்கள் கண்ணாடியிழை தொழில் தவிர வேறு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளீர்களா?**

கட்டிட நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவதுண்டு. கட்டிட நிர்மாணிப்பாளர்களின் அமைப்பின் செயலாளராக நான் உள்ளேன்.

**வேறு சமூகசேவை அமைப்புகளில் ஈடுபாடு கொண்டுள்ளீர்களா?**

(சிரிக்கின்றார்) கல்முனை 'ரோட்டரிக் கழகத்தின்' தலைவராக உள்ளேன்.

*பேட்டியின் பின்னர் அவரது தொழிற்சாலையைச் சுற்றிக் காட்டினார். வள்ளங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருந்தன. இறால் குஞ்சுகள் வளர்க்கும் பிரமாண்டமான தொட்டிகள் சில தயாரிக்கப் பட்டுக்கொண்டிருந்தன. பெரிய Multi day Boat ஒன்று தயாராக நின்றுகொண்டிருந்தது. ஊழியர்கள் நேர்த்தியாக வேலை செய்துகொண்டிருந்தார்கள்.*

*ஈற்றில் தொண்டனின் சார்பில் நன்றி கூறி விடைபெற்றுக் கொண்டோம்.*

- ஆழியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனியும் தாமதமேன்...?

நிமிடத்திற்கு நிமிடம்
நிலைகுலைந்து ஓடியலைந்து
வழி தவறிய ஆடுகளாய்
சிதறிய எம் உறவுகள்
கண்முன்னே காட்சியளிக்க

உயிர் வாழ்வதைக் கூட
உணர முடியாதவர்களாய்
உயிரை நெஞ்சில் சுமந்தபடி
எம் உறவுகள் குவிந்திருக்க

வாழ்ந்த காலங்களையும்
வாழ்கின்ற நாட்களையும்
பிரிந்துவிட்ட உறவுகளையும்
நினைத்துப்பார்க்க நினைவற்றவர்களாய்
எம் கரங்களில் வீழ்ந்திருக்க

கண்டும் உணராதவர்களாய்
அறிந்தும் அறியாதவர்களாய்
ஆடம்பரமாய் உண்டு மகிழும்
புத்திகெட்ட மனிதராய்த் தான்
புவிதனில் இன்றும் வாழ்கின்றோமா?

உள்ளத்தை உருக்கி
உணர்வுகளுடன் ஓர்
உரிமைப் போராட்டம் செய்
உனக்குள்ளும் உணர்வு பிறக்கும்

உணர்வு எனும்
உளி கொண்டு
உன் உள்ளத்தை உடைத்துக்கொள்

சிந்துகின்ற.......
ஒவ்வொரு துளி இரத்தத்திலும்
ஓர் உண்மையை
உணர்ந்துகொள் (கண்டுகொள்)

எப்போது உணர்கின்றாயோ
அப்போது புதிதாய்ப் பிறக்கின்றாய்
எப்போது உதவி செய்கின்றாயோ
அப்போது மனிதனாகின்றாய்

❖ செல்வன். நாதன் சுரேஸ்

## விடிவு வரும்

விடிவொன்று தோன்றும்
வெள்ளியது பூக்கும்
முடிவொன்று கிடைக்கும்
முழு மகிழ்வடைவோம்

புயல் ஓடிப் போகும்
பூந்தென்றல் வீசும்
இயல்பான வாழ்க்கை
இனி எம்மைச் சேரும்

இருளோடி மறையும்
இரவியவன் உதிப்பான்
அருள் வெள்ளம் தன்னை
அவன் அள்ளிச் சொரிவான்

அநியாயம் தோற்கும்
அறம் வாகை சூடும்
தனி ஒருவன் சட்டம்
தலைகீழாய்ப் போகும்

பாடெல்லாம் பட்டோம்
பலன் தன்னைப் பெறுவோம்
நாடெல்லாம் சேர்ந்து
நாம் வாழச் செய்யும்

மூத்த தமிழ் இனத்தின்
முதுகின்மேல் ஏறி
கூத்தாடும் தீயோர்
கூட்டமது வீழும்

நாளையது நமதே
நம்புங்கள்; நடக்கும்
வேளையது பிறக்கும்
வீண் கவலை ஏனோ?

அதிசயங்கள் யாவும்
அடுத்தடுத்துத் தோன்றும்
புதியதோர் தேசம்
பூமிதனில் காண்போம்

வாகரைவாணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆதித் திருச்சபையின் தன்மையும் அதன் வளர்ச்சியும்

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் யூதர்கள் மத்தியில் இருந்தே தன் சீடர்களைத் தேர்ந்தெடுத்தார். இயேசுவைத் தொடர்ந்து அவருடைய சீடர்களும் திருச்சபையில் ஆரம்பகாலத்தில் தம் இனத்தவர்களாகிய யூதர்களுக்கே நற்செய்தியைப் போதித்தனர். பெந்தக்கோஸ்து விழாவுக்கு ஜெருசலேமுக்கு வந்திருந்த யூதர்களுக்கு, பாலஸ்தீனாவில் இருந்து வந்த எபிரேய மொழி பேசும் யூதர்களுக்கு, திருவிழாவுக்கு வந்திருந்த கிரேக்க மொழி பேசும் யூதர்களுக்கு என எல்லா விதத்திலும் யூதர்களுக்கே போதித்தனர். அவர்கள் நற்செய்தியை ஏற்று மனந்திரும்பி, திருமுழுக்குப் பெற்றுத் திருச்சபையில் சேர்ந்தார்கள். ஸ்தேவானின் மரணத்தினால் சிதறுண்டுபோன இவர்கள் எங்கெல்லாம் சென்றார்களோ அங்கும் யூதர்களுக்கே போதித்தனர். இவ்வாறு ஆதித் திருச்சபையில் எல்லோரும் யூதர்களாய் இருந்ததனால் கிறிஸ்தவம் யூத மதத்தின் ஒரு கிளை என்ற எண்ணம் அவர்கள் மத்தியில் தோன்றி, தாங்களே தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் எனும் எண்ணம் அவர்களிடத்தே ஏற்பட்டிருந்தது.

ஆனால், கிறிஸ்தவம் தனி ஒரு கலாசாரத்துக்கோ, இனத்துக்கோ, காலத்துக்கோ, நாட்டிற்கோ மட்டுப்படுத்தப்பட்டதல்ல என்பதனை மத்தேயு 28:19-20இல் "நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்...." எனும் இயேசுவின் வசனம் சுட்டிக் காட்டுகிறது. திருச்சபையின் பிறப்பு விழாவின் போது படிப்பறிவில்லாத கலிலேயர்கள் கூட அயல் மொழி பேசினார்கள். இதனால் சீடர்களின் இப்பணி யானது அகிலமெங்கும் தேவை என்பது சுட்டிக்காட் டப்படுகின்றது.

இவ்வாறு ஆரம்பகாலத்தில் யூதர்களை உள்ளடக்கியிருந்த திருச்சபையானது, பேதுரு யோப்பாவில் கண்ட காட்சி, கொர்னேலியு வீட்டில் பரிசுத்தாவியால் நிரப்பப்பட்ட சம்பவங்கள் மூலம் கடவுள் ஆள் பார்த்துச் செயற்படுவதில்லை என்பதையும் நேர்மையுடன் செயற்படும் அனைவரும் கடவுளுக்கு உகந்தவர்களே என்பதையும் அறிந்துகொண்டனர். மேலும், ஜெருசலேம் சங்கத் தீர்மானமும் திருச்சபையின் வளர்ச்சிக்கு ஒரு திருப்புமுனையாக அமைந்தது. திருச்சபையில் புறவினத்தவர் சேர எதுவும் தடையாக இருக்கவில்லை. எவனும் தன் கலை, கலாசார, பண்பாட்டைக் கைவிடாது கிறிஸ்தவனாகலாம். இதனால் திருச்சபையானது யூதர்கள் எனும் குறுகிய வட்டத்திலிருந்து விரிவடைந்து புறவினத்தவர்களும் சேர்ந்து வளர்ச்சியடைய வழி கோலியது.

மேலும், பெந்தக்கோஸ்து நிகழ்வில் ஜெருசலேமில் கூடியிருந்த யூதர்களே அதன் முதல் அங்கத்தவர்கள். இதனாலேயே பேதுரு அங்கேயே தங்கியிருந்து ஆயராகவிருந்தார். ஜெருசலேம் சபையே தாய்ச் சபையாகக் கருதப்பட்டது. திருச்சபையில் தலைமை அதிகாரம், நிர்வாகம், ஆட்சி பீடம் அங்கேயே அமைந்திருந்தது. ஏனைய சபைகள் ஜெருசலேம் சபைக்கு பொருளுதவிகள் அனுப்பி வைத்தன. அவர்கள் அதனையே தாய்த் திருச்சபையாக ஏற்றிருந்ததைச் சுட்டிக் காட்டுகிறது. பவுல் தன் ஒவ்வொரு பயணத்திலும், முடிவிலும் ஜெருசலேம் சபையினைச் சந்தித்தது இதனை வெளிக் காட்டுகிறது.

இவ்வாறு ஜெருசலேமில் தொடங்கிய திருச்சபையானது தூய பவுலின் தீவிர போதனையால் யூதேயா, சமாரியா, கலிலேயா, அந்தியோக்கியா, பம்பிலியா, கலாத்தியா, பிரிதியா, இக்கோணியா, லிஸ்திரா, பிலிப்பு, எபேசு போன்ற நாடுகளூடாக உரோமையில் வளர்ச்சி கண்டதைக் காண முடிகிறது.

மேலும், இவ்வாறாகப் பல இடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளில் ஏற்பட்ட பிரச்சினைகள், சந்தேகங்கள் போன்றவைகளைத் தீர்க்க மூப்பர்களும் கண்காணிப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர். உரோமை ஆயருடன் இவர்கள் அடிக்கடி தொடர்பை ஏற்படுத்திக்கொண்டிருந்தனர். தங்கள் தளச்சபையின் பிரச்சினைகளை அவருடன் கலந்தாலோசித்து முடிவெடுத்தார்கள். இவ்வாறு திருச்சபையின் நிர்வாகம் ஒரு கட்டுக்கோப்பிற்கு வளர்ச்சி பெற்ற விதத்தினைக் காண முடிகிறது.

ஏழைகள் கைம்பெண்களைக் கவனிக்கவும் பந்தி பரிமாறவும் திருவருட்சாதனங்களை வழங்கவும் துணைத் தொண்டர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் திருச்சபையின் வளர்ச்சிக்கு அப்போஸ்தலர்களுக்குப் பக்க துணையாக இருந்தனர். இவ்வாறு ஆதித் திருச்சபையானது தெளிவான, ஒழுங்கமைப்பான அதிகாரம் கொண்ட ஒரு ஸ்தாபனமாக அமைப்புப் பெற்று விளங்கியதைக் காண முடிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சில ஆண்டுகளிற்கு முன் 'ஆனந்த விகடனில்' சத்குரு ஜக்கி வாசுதேவ என்பவரின் 'உனக்காகவே ஒரு ரகசியம்' என்னும் தொடர் எழுத்தாளர் சுபாவின் எழுத்தாக்கத்தில் வெளிவந்தது. ஒவ்வொரு அத்தியாயமும் வாழ்க்கையின் ஒவ்வொரு விடயத்தையும், பிரச்சினையையும் எடுத்துக்கூறி அதிலிருந்து எவ்வாறு தீர்வு பெறலாம் என்பதையும் விளக்கியிருந்தது.

அதிலொன்று 'கோபம் வருவதற்கு வெட்கப்பட வேண்டும்'. அதனை இன்று மீட்டுப் பார்ப்போம்.

யாரோ ஒருவனுக்குக் கைகள் இல்லை, வேதனை கொள்கிறான். இன்னொருவனுக்கு இரண்டு கைகளும் இருக்கின்றன, ஆனால் அவற்றை நிரப்ப போதிய பணம் இல்லை. அவனும் வேதனையால் தவிக்கிறான். வேறொருவன் பணத்திலேயே புரள்கிறான்.




ஆனால், அவன் ஆசைப்பட்டதைச் சாப்பிட முடியவில்லை, வேதனைப்படுகிறான்.

இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் வேதனை கொள்கின்றார்கள்; தங்களை வருத்திக் கொள்கிறார்கள். உங்களுக்கு ஜலதோஷம் வந்திருக்கின்றது என்று வைத்துக்கொள்வோம். அது உங்களை முடக்கிப் போடாதவரை அதைப் பெரிதுபடுத்த மாட்டீர்கள். அதற்காக உங்களுக்கு நோய் இல்லையென்று அர்த்தமில்லை. படபடப்பு, பயம், வக்கிரம், கோபம் என்று எத்தனையோ பைத்தியகாரத்தனங்களும் அப்படிப்பட்ட நோய்கள்தான்.

மனநலம் தவறிய ஒருவன் தன்னை ஒரு கயிறு வைத்து தூணுடன் கட்டிப் போட்டிருப்பதாகக் கற்பனை செய்துகொண்டான். தூணையே சுற்றிச் சுற்றி வந்தான். அவனுடைய பரிதாப நிலையைப் பார்த்து வேறொருவன் அவனைத் தள்ளிவரச் சொன்னான்.

"என்னை இத்தூணுடன் பிணைத்திருக்கும் கயிறை முதலில் வெட்டி என் கையில் கொடு; அப்புறந்தான் என்னால் நகர முடியும்" என்றான் அவன்.

நீங்களும் அப்படித்தான். கோபம் என்ற தூணுடன் யாரோ உங்களைப் பிணைக்கவில்லை. இதைப் போன்ற தேவையற்ற பல விஷயங்களுடன் கற்பனைக் கயிற்றால் உங்களை நீங்களேதான் பிணைத்துக்கொண்டிருக்கிறீர்கள். நீங்களாகத் தயாரித்து விலங்கிட்டுக்கொண்ட அச்சங்கிலிகளை யாராவது வந்து துண்டிப்பார்கள் என்று காத்திருந்தால் வாழ்நாளே முடிந்துவிடும்.

கோபம் உற்பத்தியாவது உங்களிடமா? அல்லது வேறெங்கோ வெளியிலா? அதை எடுத்து வந்து உங்கள் மாமியார் உங்கள் மீது அணிவிக்கிறார் என்று சொல்லித் தப்பிக்கப் பார்க்கிறீர்கள்.

சங்கரன்பிள்ளை என்பவர் டாக்டர் வீட்டிற்குப் போனார்.

"சமீபகாலமாக எனது மனைவிக்குக் காது கேட்கவில்லை டாக்டர். எதையும் பத்துத் தடவை சொன்னால்தான் பதில் சொல்கிறாள்"

"அது எவ்வளவு மோசம் என்று தெரிந்துகொள்ள வேண்டும். பதினைந்து அடி தூரத்தில் நின்று ஏதாவது சொல்லுங்கள். பதில் வரவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் இன்னும் கொஞ்சமாகக் கிட்டப் போய் பேசிப் பாருங்கள். எத்தனை தூரத்தில் நின்று பேசினால் அவளுக்குக் காது கேட்கிறது என்று சொல்லுங்கள்"

சங்கரன்பிள்ளை வீட்டுக்குப் போனார்.

"ஏதாவது போன் வந்ததா...?" என்று பதினைந்தடி தூரத்தில் நின்று கேட்டார், பதில் வரவில்லை. ஒவ்வொரு அடியாய் நெருங்கிப் போய் அதே கேள்வியைக் கேட்டார். மனைவியிடமிருந்து இரண்டடி தூரத்தில் நின்று கேட்டபோது அவள் வெடுக்கென்று திரும்பினாள்.

"பத்தாவது தடவையாகச் சொல்கிறேன் எந்தப் போனும் வரவில்லை. போதுமா..?"

இப்போது சொல்லுங்கள் பிரச்சினை யாரிடம் இருக்கின்றது, சங்கரன்பிள்ளையிடமா அல்லது அவரது மனைவியிடமா..?

உங்களுடைய இன்றைய நிலைமைக்குக் காரணம் உங்கள் மாமியார் அல்ல, நீங்கள்தான். கோபம் விலகியதும் வெட்கப்படுவதாகச் சொல்கின்றீர்கள். கோபம் வருவதற்கே நீங்கள் வெட்கப்பட வேண்டும்.

குரங்கொன்று ஆர்வமிகுதியால் அசிங்கத்தைத் தொட்டுப் பார்த்தது; தன்னிச்சையாகக் கையைத் தன்மீதே துடைத்துக் கொண்டது; அதன் துர்நாற்றம் தாங்கமுடியாமல் அந்த இடத்தை விட்டே ஓடிப் போனது. ஆனால், மணம் வீசும் மலர்த் தோட்டத்துக்குப் போனால்கூட துர்நாற்றம் தொடர்ந்தது; குரங்கு செய்வதறியாது தவித்தது.


அசிங்கத்தை எடுத்துப் பூசினால் எங்கே போய் ஒளிந்துகொண்டாலும் துர்நாற்றத்தில் இருந்து தப்பிக்க முடியாது. கோபம், பொறாமை, சந்தேகம் போன்ற பல தவறான குணங்களுக்கு இடமளித்தால் வேதனைகளில் இருந்து விடுபட முடியாது. இது நீங்கள் அறியவேண்டிய ஆரோக்கிய இரகசியம்.

## ஓவியருள் ஓரு விஞ்ஞானி

மோனாலிசா உலகின் புகழ் பெற்ற ஓவியம். அந்தக் கண்கள், அந்த மெல்லிய சிரிப்பு, முகத்தில் புகைபோல் படர்ந்துள்ள அடங்கிய சோகம் அப்பப்பா..! ஓவியனின் தூரிகை ஜாலம் காட்டியுள்ளது. இதனை வரைந்த ஓவியர் லியானார்டோ டாவின்சி. இவர் ஓவியராக இருந்தாலும் விஞ்ஞானிகளின் வரிசையிலும் சேர்க்கப்படுபவர். இன்று பாவனையில் உள்ள இயந்திரங்களுள் பெரும்பான்மையானவை இவரது கற்பனையில் ஓவியங்களாக உருவானவைதானாம்.



லியானார்டோ டாவின்சி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கடந்த இதழில் பிரசுரமாகியிருந்த 'காதற்ற ஊசிகள்' என்ற சிறுகதையை எழுதியிருந்தவர் வயலற் சந்திரசேகரம். அவருடைய பெயர் பிரசுரமாகாமைக்கு வருந்துகிறோம். (ஆ–ர்)**

# எங்க இனிகள் ஓயுமா...?

- வயலற் சந்திரசேகரம் -



"என்னம்மா! அங்க ரொயிலற்றுக்கு ஒரே கியூவா இருக்கு... இருக்கிறது ஆறு கக்கூஸ்... அகதிகள் எண்டு இருக்கிறம் ஆயிரத்துக்கும் மேல. எல்லாம் எங்கட தலவிதி...."

அலுப்பும் சலிப்பும் கோபமும் வழிந்தோட, வார்த்தைகள் உணர்ச்சிகளை வெளிப்படுத்த வினித்தா அழாக் குறையாகக் கூறினாள், தனது தாயிடம் விம்மலும் விரிசலுமாய்..........

"என்னம்மா... இந்த வாழ்க்கை? இதைவிடச் சாவது மேல். அண்ணயவ கனடாவில இருந்து லட்ச லட்சமா உழச்சனுப்ப பாத்துப் பாத்து விதவிதமாக் கட்டின மாடிவீடு.... மாபிள் பதிச்ச மண்டபம்..... நல்லது, கெட்டதுக்கு நாலுபேர் கூடி தங்கி மகிழ ஏற்ற இடம். அங்கயே நாலு கக்கூஸ், நாலு பாத்ரூம்.... இது என்ன கொடுமையம்மா..? எங்களின்ர சனம் பெருளாதாரம் இழந்து... வசதியில்லாம பள்ளிக்கூடத்தில படும்பாடு... அம்மா! இப்ப பாரதியார் நிண்டால் உணர்ச்சி வசப்பட்டு

'நெஞ்சுப் பொறுக்குதில்லையே - எனக்கு நெஞ்சுப் பொறுக்குதில்லையே' என்று பாடியிருப்பார்" என்றாள் வினித்தா. மேலும் அவளது வாதத்தை மெருகேற்ற அவள் தம்பி விதர்ஷன் இணைந்துகொண்டான்.

"அக்கா பாரதியார் மட்டும் ரீ.வீ பாத்திருந்தால் உடனே பாடுவார்...

'நெஞ்சில் உரமு மின்றி
நேர்மைத் திறனு மின்றி
வஞ்சனை சொல்வாரடீ! - கிளியே!
வாய்ச் சொல்லில் வீரரடீ!

கூட்டத்திற் கூடி நின்று
கூவிப் பிதற்ற லன்றி
நாட்டத்திற் கொள்ளாரடீ! - கிளியே!
நாளில் மறப்பாரடீ!' "

என்று பாடி முடித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"..ம்.....ம்..." என்று நீண்ட பெருமூச்சை கண்கலங்க வெளியிட்ட தாய் கனகம்மா...

"நீங்கள், கேட்டுப் பிறந்த வரமையா இது. வீடிழந்து, வாசல் இழந்து, சொந்த பந்தமிழந்து, சொந்த ஊர் உறவிழந்து, தெரியாத புரியாத கிராமத்துச் சின்னப் பள்ளியில.... கூட்டத்தோட கோவிந்தா எண்டு வந்து சேந்திட்டம்.

குப்பகூழங்கள் ஒருபுறம்... அதிலும் மாரி மழையில சேறும் சகதியும்... ஒழுங்கான சாப்பாடில்ல... கொண்டுவந்த மாத்துடுப்புத்தான்... குளிர் வேற வாட்டி வதைக்கிது... கடத்தெருவுகள் இல்லாத கிராமமாக் கிடக்குது இவடம்... நமக்கு மட்டுமா இந்த அவலம்..? அங்க பாரு புள்ள அந்தப் புள்ளப் பெத்தவள் படுற பாட்ட... அந்தக் குழந்த குஞ்சுகள் என்ன பாவம் செய்ததுகள்..?

அதவிடப் பெரிய பாவம் அந்தா பார் மகன்.... அந்த எழுபது வயசு மனிசன் கை, கால் நடுங்க... படுற பாட்டப் பார். இதவிடக் கொடும வேணுமா..? என்ர சிவனே...!" என்றாள் கனகம்.

விதர்ஷன் குறுக்கிட்டு வேடிக்கையாக "அம்மா..! அதுதான் வடக்கின் வசந்தத்தை நோக்கி.."

இடையில் தந்தை சிவபாதசுந்தரம் களைத்து மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க சில சாமான்களை வாங்கி வந்திருந்தார். ஈரமாகப் பிசுபிசுத்துக்கொண்டிருந்த நிலத்தில் அமர்ந்துகொண்டார்.

"இந்தா கனகம்! உனக்கு சீனி வியாதி வேற... டவுணுக்குப் போறதெண்டால் பெரிய சிரமந்தான்" என்றவாறு 'டயோனில்' குளிசைக் காட்டை நீட்டினார்.

"ஒழுங்காக் குளிசயப் போடு இல்லாட்டாக் கரச்சல்தான். என்னவாம் பிள்ளைகள்..? அதுகளுக்கும் பிஸ்கட், சோடா எண்டு வாங்கக் கூடியத வாங்கி வந்திருக்கன். என்ன.. அங்க வீட்டில சொகுசா வாழ்ந்ததுகள்... இப்ப இந்த நரக வேதனய அனுபவிக்கவேண்டி இருக்கு. எப்பிடியும் கொழும்புக்குப் போற அலுவலக் கெதியாப் பாக்கோணும்.

இதவிட 'லொஜ்ஜுகள்' பறவாயில்ல..."

"லொஜ்ஜுகள் பரவாயில்ல என்றியள். அங்கயும் கெடுபிடிதானாம். கொழும்பில போனாலும் ஒரு லொஜ்ஜில இரண்டு நாள்தானாம் தங்க முடியுமாம். பொலீஸ் உத்தரவாம். இப்ப நாங்க எங்கதான் போக முடியும்...? தமிழனுக்கு வந்த தீராத தலையிடியிது. ஏனப்பா! கொழும்பில பாத்து ஒரு வீடு எடுத்தால் என்ன?"

"அங்கயும் வீடுகள் எடுக்கிறது இப்ப பெரும் கஷ்டம் மட்டுமில்ல. பொலிஸ் கெடுபிடிகளும் கூட"

"எங்களுக்கு பொடியள் கனடாவில எண்டபடியால் பறவாயில்ல. கையில மடியில பணம் இல்லாததுகள் என்ன செய்யுங்கள்..?"

"இப்ப இங்க இருக்கிற நிலமயப் பாத்தா தொத்து வியாதிகள் பரவும்போலக் கிடக்கு. அதிலும் தமிழனுக்கு அழிவுதான்"

"ஏனப்பா! சொன்னாப்போல உங்களின்ர பிரண்ட் அன்ரனி திருகோணமலையில இருக்கிறாரல்லோ? நாம அங்க போனா என்ன?"

"அதுவும் நல்ல யோசனைதான் பார்ப்போம்" என்றார் சிவபாதசுந்தரம்.

அவர்களது முயற்சி வீண்போகவில்லை. திருகோணமலைக்குப் போவதற்கு அலைந்து திரிந்து அதிகாரிகளைச் சந்தித்து ஆவணங்களைத் திரட்டுவதற்குள் வேண்டாம் வேண்டாம் என்றாகிவிட்டது. அத்துடன் முடியுமா வேலை? வரிசையில் மழைக்கும் வெயிலுக்கும் ஈடு கொடுத்து நனையவும் வேண்டும், பின்பு காயவும்வேண்டும், பின்பு கப்பலில் ஏறினால், கடலில் கப்பல் போடும் மல்யுத்தத்தில் வேறு கலந்து கொள்ளவேண்டும்.

நோய் பாதி, பட்டினி வேட்கை பாதி, மன உழைச்சல் வேறு வாட்டி எடுக்க, சத்திவேற மனிதரை வாட்டி வதைக்க ஏதோ தப்பினோம் பிழைத்தோம் என்று திருகோணமலை ஜெட்டியில் வைத்து இறங்கியவர்கள் முதலில் 'திரீ வீலர்' ஒன்றை எடுத்துக்கொண்டு கிறீன் வீதியில் அமைந்துள்ள 'சன்சயின்' லொஜ்ஜுக்கு வந்து இறங்கினார்கள். அங்கும் சனக்கூட்டந்தான். ஒருவாறு இரண்டு கட்டில் றூம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தினார்கள். இரண்டு பேர் தங்கினால் ஐநூறு ரூபாய். நான்கு பேர் அதே குட்டி றூமில் தங்கினால் ஆயிரம் ரூபாய். என்ன செய்வது! ஆறுதலாகக் கொஞ்சம் சாய்ந்து ஓய்வெடுத்த பின்பு சிவபாதசுந்தரம் ஆலய வீதியில் அன்ரனி வீட்டைத் தேடிப் பிடித்தார்.

"ஓ... ஆப்ர லோங் ரைம்...! ஹாய்.. சிவா! என்ன திடீர் எண்டு இந்தப் பக்கம்? வாங்க... வாங்க... உள்ள வாங்க" என்று வரவேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்ரனி...! வடக்கு யுத்தக் கெடுபிடியில ஊரை விட்டு ஓடி காட்டுக் கிராமம் ஒண்டில ஒரு பாடசாலையில தஞ்சம் புகுந்தம். ஆயிரத்துக்கும் மேற்பட்ட சனம், எல்லாம் இழந்து அங்க அலமோதுதுகள். நாங்க ஏதோ தப்பி ஓடி வந்திட்டம்" என்றார் சிவபாதம்.

அன்ரனி குரல் கொடுத்தார்.

"சாந்தி... சாந்தி... அங்கிளுக்கு ரீ கொண்டுவாம்மா"

"இதோ வாறன் அப்பா..."

"ஆ.... பிறகு... சிவா..." அன்ரனியின் முகத்தைத் துன்பத் திரை கவ்வியது. சிவா அவலங்களை அடுக்கிக்கொண்டே போனார். இடையிடையே அன்ரனி தனது ஆழ்ந்த அனுதாபங்களை ஆத்மார்த்தமான முறையில் வெளிக்காட்டத் தவறவில்லை. அன்ரனி ஆதங்கத்தில் அலை மோதினார், நெஞ்சுருகினார். தேனீர் சுடச் சுட வந்தது. சிவபாதம் அருந்திக்கொண்டே பேசினார். அன்ரனி தொடர்ந்தார்......

"கல்லெறி பட்டவனுக்குத்தான் தெரியும் நோக்காடு. அது சரி.... எங்க உங்கட வைபும் புள்ளைகளும்?"

கண்கலங்கிப் போனார் சிவபாதம். அன்ரனி ஆதங்கமாகக் கேட்டார்.

"வட் ஹப்பன்?"

பொங்கி வந்த கவலைச் சுமையால் விம்மினார் சிவபாதம்.

"நாலாவது மகனையும், மூன்றாவது மகனையும் ஆமி சுட்டுப்போட்டான்.." என்று முடிக்குமுன்பே அன்ரனி "அடப் பாவமே...!" என்று தலையில் பலமுறை அடித்துக்கொண்டார். கண்ணீர் தானாகக் கரை புரண்டது.

"இப்பெல்லாம் கொலைகள் இலங்கையில மலிஞ்சு போச்சு அன்ரனி" தொடர்ந்தார் சிவபாதம்.... "மூத்தவனும் இரண்டாவது மகனும் கனடாவில் உழைக்கினம் - மற்றது..... மகளும் மகனும் என்டோட வந்திரிக்கினம்"

"எங்க ஆக்களக் காணல்ல...?"

"சன்சயின் லொஜ்ஜில நிக்கினம்...."

"ஏன் அங்க நிக்க...? உடனே போய்க் கூட்டிட்டு வாங்க"

மன ஆறுதலோடு புறப்பட்டார் சிவபாதம்.


வந்தவர்களை இன்முகம் காட்டி இருகரம் நீட்டி அன்ரனியும் மனைவி லூர்து மேரியும், மகள் ஜெனட்டும் வரவேற்றார்கள்.

"பண்டிகைக் காலம் ஆரம்பமானாலும் மக்கள் மனதில் மகிழ்ச்சி இல்லை. வடக்கில் தமிழர்கள் போரினால் அலைமோத நாம் மட்டும் அலங்கார ஆடை அணிகளுடன் இனிய தீன்பண்டங்கள் செய்வதா? என்று சோர்ந்து போனார்கள்.

திருமலை பெரியகடைப் பங்கு மக்கள் தானதர்மங்களைச் செய்வதானாலும் போதிய வருமானமும் இல்லை. விலைவாசியோ ரொக்கட்டு வேகத்தில் உயர மக்கள் அரை வயிறும் கால்வயிறுமாக அங்கலாய்க்கும் பொருளாதார நிலை. போகிற போக்கில் சோமாலியாவை இலங்கை மிஞ்சினாலும் மிஞ்சலாம். வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் மாழ்வதுதான்....."

ஆதங்கமாகக் கூறினார் அன்ரனி. சிவபாதம் தொடர்ந்தார்.......

"அன்ரனி! இங்கால ஒரு வீடு வாடகைக்குப் பார்த்தால் நல்லம். தொடர்ந்து உங்களுக்குச் சிரமம் தரக்கூடாதல்லோ..!"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஐயோ! சிவா இங்க ஒரு சின்ன வீட்டுக்கெல்லாம் லட்சக்கணக்கில அற்வான்ஸ் கேப்பாங்க. இப்ப காலம் மாறிப்போச்சு. சில சனம் நியாயமா நடக்குது. சில சனம் தவிச்ச முயல் அடிக்குது. பாப்பம் நல்லதா அம்புட்டாப் போகலாம்" என்றார்.

சிவா தொடர்ந்தார் "அன்ரனி! என்ர புள்ளைகள இங்க படிக்கப் போடேலுமே?"

"நான் 'இன்டர் கொலிஜ்' பிறின்சிபலோட கதைக்கிறன். புள்ளய 'சென்மேரிசில' போடலாம். அதுக்கு முதல்ல பொலிசில போய்ப் பதிய வேணும். அதையும் செய்து முடிப்பம்"

அன்ரனி திருகோணமலைப் பெரியகடைப் பங்கின் மேய்ப்புப் பணிச் சங்கத் தலைவராகப் பல வருடங்கள் சேவை ஆற்றி வருகிறார். எனவே அன்ரனி பங்குத் தந்தையைச் சந்தித்து, மேய்ப்புப் பணிச் சங்கத்தைக் கூட்டி ஆலோசித்தும் கலந்துரையாடியும் பல தீர்மானங்களை எடுத்தார்கள். வடக்கில் தமிழர் படுகொலைக்கு எதிராகத் திருச்சபை ஏகோபித்த குரல் எழுப்ப ஆவன செய்யவேண்டும். ஜூன் 5ம் திகதி காலை 7.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை ஒரு சந்தியுடனான இறைவழிபாடு பங்கு மக்கள் ஒன்றிணைந்து நடாத்துவது. ஆடம்பரச் செலவுகள், வறட்டு கௌரவச் செலவுகள், புத்தாடைச் செலவுகளைத் திரட்டி ஏனைய பங்குகளையும் இணைத்து யுத்தத்தால் பாதிக்கப்பட்டோரான அகதிகள், விதவைகள், தாய் தந்தையரை இழந்தவர்கள், மனநோயால் பீடிக்கப்பட்டோர், கால்களை இழந்து ஊனமுற்றோர், பிள்ளைகளை இழந்தோர் இவ்வாறான அனைவருக்கும் உணவு, உடைகள், பணம், மருந்துகள் என்பனவற்றைத் தகுந்த பாதுகாப்புடன் எடுத்துச் சென்று வழங்குதல்.

தீர்மானங்களை நிவைற்றுவதற்காக மேய்ப்புப் பணிச் சங்கம் மட்டுமல்ல மரியாயின் சேனை, இளைஞர் அமைப்பு ஆகியவையுடன் ஏனைய பங்குகளும் இணைந்து இயங்கியதன் முடிவு 5ம் திகதி ஆராதனைகள் வெற்றி பெற்றன. திருச்சபைக்குக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. நான்கைந்து லொறிகள் தகுந்த பாதுகாப்புடன் திருகோணமலையை விட்டுப் புறப்பட்டன. திருகோணமலைக் கிறீஸ்தவர்கள் இயேசுவின் "உன்னிடம் வெளியாடையைக் கேட்போர்க்கு உள்ளாடையையும் மறுக்காதே" என்ற வேத வாக்கை வாசித்தபடி அகதிகளை நேசித்தார்கள்.

அன்ரனியின் ஆழ்மனம் ஓங்கி ஒலித்தது

"யுத்த ஓலம் நீங்குமா, இரத்த வெறி அடங்குமா? அமைதி சமாதானம் நிலைக்குமா? கொலை கொள்ளை ஆட்கடத்தல் பித்தலாட்டம் ஓயுமா......? ஓயுமா.....? ஓயுமா.....?

## காட்சியும் கவிதையும் 05



இந்தப் படத்தைப் பார்க்கும்போது உங்கள் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களை இருவரிக் கவிதையாக எழுதி அனுப்புங்கள். தெரிவு செய்யப்படும் கவிதை அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.



Y. வர்ஷா

## காட்சியும் கவிதையும் 04

### பாராட்டுப் பெறும் கவிதை

உதிர்ந்து போகும் உறவுகளை நினைத்து
உருகித் தவிக்கும் உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகுனம் பார்த்தல்

- மு. சிதம்பரி -



காலையில் கண் விழித்து எழுந்ததும் தங்கள் தங்கள் கை மலர்களைப் பார்ப்பது நல்லது என்பார்கள். சில திருமணமான பெண்கள் தங்கள் கணவன் முகம் பார்த்துக் கால்கள் தொட்டுக் கும்பிடுவது உத்தமம் என்பார்கள். வேறு சிலர் தங்கள் காலில் அணியும் பாதணிச் சோடியைப் பார்ப்பது நல்லது என்பர். பிரயாணத்தின்போது வீட்டிலிருந்து புறப்படும் போது பின்னின்று கூப்பிடுதல் சகுனப் பிழை என்று கூறுவர். தெருவிற்கு வரும்போது பூனை, சாரைப் பாம்பு குறுக்கிடுவது கூடாது, மொட்டைத் தலையன் முன்னுக்கு வரக்கூடாது, மங்கையர்களுக்கு வலக்கண், தோள் துடிப்பது கெட்டசெய்தி வருவதற்கு அறிகுறியாகும். நாம் ஒரு கருமத்துக்கு போகும்போது தடைகள், அலைச்சல் ஏற்படும்போது இன்றைக்கு நான் யார் முகத்தில் முழித்தேனோ தெரியாது என்று சொல்லிக் கவலைப்படுகிறோம்.

சகுனம் பார்ப்பது என்பது தொன்று தொட்டு மக்கள் கடைப்பிடித்து வரும் ஒரு நடைமுறையாகும். இதை ஒரு மூட நம்பிக்கை என்றும் சொல்வார்கள். ஆனால், இது மக்களால் தொடர்ந்தும் கடைப்பிடித்து வரப்படுகிறது.

சகுனம் பார்த்துத் தன் கடமைகளைச் செய்யும் ஒரு ஜமீந்தார் இருந்தார். அவர் மறுநாள் காலை ஒரு முக்கியமான கருமத்துக்குச் செல்லவேண்டியிருந்தது. அவர் அன்று இரவு படுக்கைக்குப் போகுமுன் தன் வேலையாளை அழைத்து 'நீ நாளை அதிகாலையில் நித்திரை விட்டெழுந்ததும் வீட்டின் முன் முற்றத்தில் இரண்டு காகங்கள் சோடியாக இருப்பதைக் கண்டால் ஓடிவந்து என்னை அங்கு அழைத்துக்கொண்டுபோய் அந்தக் காகங்கள் இருக்கும் இடத்தை எனக்குக் காட்டவேண்டும்' என்று கூறிவிட்டுப் படுக்கைக்குச் சென்றார்.

மறுநாள் அதிகாலையில் வேலையாள் நித்திரை விட்டெழுந்து ஜமீன்தார் கூறியபடி எங்கே ஒரு சோடிக் காகம் இருக்கிறது என்று பார்த்தான். மாளிகை முற்றத்தில் ஒரு சோடிக் காகம் இருப்பதைக் கண்டான். ஓடிப்போய் ஜமீன்தாரை எழுப்பி அவரைக் கையில் பிடித்துக்கொண்டு வந்து ஐயா கண்ணைத் திறந்து பாருங்கோ என்றான். ஜமீந்தார் கண்ணைத் திறந்து பார்த்தால் அதிலே ஒரு காகம் எழுந்து பறந்துவிட்டது. அவருக்குக் கோபம் வந்துவிட்டது.

அவர் 'எங்கேயடா ஒரு சோடிக் காகம்? ஒன்று மட்டுந்தானடா இருக்கிறது' என்று சொல்லி வேலையாளைப் பிடித்து நையப்புடைத் தார். அவன் 'ஐயோ நான் இரண்டு காகம் இருந்ததைத்தான் கண்டேன். என்னை அடியாதங்கோ என்னை அடியாதங்கோ' என்று அலறித் துடித்தான். ஜமீந்தார் தன் கோபம் தீரமட்டும் அவனை நன்றாக அடித்து உதைத்து ஓய்ந்துபோய் நின்றார். வேலையாள் அவர் முன் வந்து நின்று 'ஐயா நான் இரண்டு காகம் இருந்ததற்கு இத்தனை அடி வாங்கினேன். நீங்கள் அந்த இரண்டு காகத்தையும் பார்த்திருந்தால் யாரோ ஒருவன் உங்களுக்கு இத்தனை அடி உதை தந்திருப்பான்' என்று கூறினான். இதைக் கேட்ட ஜமீந்தார் வெட்கித் தலைகுனிந்து தன் அறைக்குள் சென்று பஞ்சணையில் துப்பட்டியினால் உடல் முழுவதையும் மூடிக்கொண்டு படுத்துக்கொண்டார். உயர்ந்த அதிகார பீடத்தில் இருப்பவர்கள் தங்களின் தவறுகளை உணர்வதில்லை. "அகதி தலையில் பொழுது விடிவது" என்பது இதைத்தான்.

இது சகுனம் பார்ப்பவர்களுக்குத் தக்கதொரு பாடமாக அமைந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் மறவோம்



ஆனி வருமெனக் காத்திருந்தோம்
அந்தோனி முனிந்திரரின் வருகைக்கு
ஆசீர் பலவற்றைப் பெறுவதற்கோ
அடியோர்கள் நாங்கள் காத்திருப்போம்

காலங்கள் பல சென்றபோதும்
கைவிடாது அவர் கரமென்றும்
காத்திருப்போம் அவர் ஆசிபெற
காத்திடுவார் எம்மை எந்நாளுமே

சுகுணா அன்ரன்



## தாவரங்களுக்கு உயிரும் உணர்வும் உண்டு

மனிதர்களுக்கு, மிருகங்களுக்கு, பறவைகளுக்கு மற்றும் பிராணிகளுக்கு உயிரும் உணர்வும் உள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்ததுதான். இதைக் கண்டுபிடித்து யாரும் சொல்லவேண்டியதில்லை. ஆனால் தாவரங்களுக்கு உயிரும் உணர்வும் உண்டு என்பது வியப்பானதுதான். அவை நீரூற்றினால், தமக்கு உணவளிப்பவர் நெருங்கினால் மகிழ்ச்சியுறுகின்றன. அவைகளை வெட்டினால், கத்தரித்தால், எரித்தால் வலியால் துடிக்கின்றன. தொட்டுப் பேசினால் கிளர்ச்சியடைகின்றன; உற்சாகப்படுகின்றன. ஆச்சரியமல்லவா..? இதைக் கண்டுபிடித்து நிறுவியவர் இந்திய விஞ்ஞானியான ஜெகதீஸ் சந்திரபோஸ்.



## குறும்(புப்)பா - 18

நெஞ்சுக்குள் நிறைந்ததடா சோகம்
நிகழ்வதினி எதுவறியோம் மாயம்
வஞ்சங்கள் வாழ்ந்தாலும் வாழாது வரும்வாழ்வு
அஞ்சாதீர் அடிமையிருள் மாயும்

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்றில் கலந்துவரும்....

## இலங்கை வானொலி தேசிய சேவையில்
## கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## ஜூன், ஜூலை - 2009

**கத்தோலிக்க நற்சிந்தனை - காலை 5.50 மணி**

நாள்: 20, 21, 22, 23 – பாரதி கென்னடி அவர்கள்
24, 25, 26 – அருள்தந்தை. அன்ரனி ஜெயராஜ்
04, 05, 06, 07 – அருள்தந்தை. T. ஜூலியன்
08, 09, 10 – மெற்றில்டா இராஜேந்திரம் அவர்கள்

**சிறுவர் உலகம் – மாலை 5.15 மணி**

நாள்:- ஜூன் 30, ஜூலை 14

கதையும் கருத்தும், கவிதை, குறுங்கதை, கட்டுரை,
பாடல்கள் இன்னும்...

**புதிய உலகம் – மாலை 4.30 மணி**

நாள்:- ஜூன் 28, ஜூலை 12

வழிபாடு, திருச்சபைச் செய்திகள், நாடகம், சிந்தனை உரை,
பாடல்கள் இன்னும்...

---

நிகழ்ச்சித் தொகுப்பு :
மலர்வேந்தன்

தொடர்பு: சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ. எண் – புபு,
மட்டக்களப்பு.



## குறும்(புப்)பா - 17

ஊரெல்லாம் மரணவிழா ஓலம்
வீரர்கள் வெற்றிவிழாக் கோலம்
வேரறுந்து வீழ்ந்தாலும் வெடிவிழுந்து சாய்ந்தாலும்
வேடிக்கை பார்த்ததம்மா ஞாலம்

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
15- 07 - 2009

'பரிசுப் போட்டி'

# விவிலியம் கற்போம் - 77

(எண்ணிக்கை 13:1–33)

(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)

ஆண்டவர் மோசேயிடம், "இஸ்ரயேல் மக்களுக்கு நான் கொடுக்கும் கானான் நாட்டை உளவு பார்க்க ஆள்களை அனுப்பு; மூதாதையர் குலம் ஒவ்வொன்றிலிருந்தும் அவர்களுள் தலைவனாயிருக்கும் ஒருவனை நீ அனுப்ப வேண்டும்" என்றார். ..................................... கட்டளைப்படியே மோசே அவர்களைப் பாரான் பாலைநிலத்திலிருந்து அனுப்பினார்; அந்த ஆள்கள் அனைவரும் இஸ்ரயேல் மக்களின் தலைவர்களாக இருந்தவர்கள். ..............................., சாபாற்று, காலேபு, இகால், ஓசெயா, பல்தி, காதியேல், காத்தி, அம்மீயேல், செதூர், நக்பி, கெயுவேல் ஆகிய இவர்களே நாட்டை உளவு பார்க்க மோசே அனுப்பியவர்கள். மோசே நூனின் மகன் ஓசேயாவை .................................... என அழைத்தார். கானான் நாட்டை உளவு பார்க்கும்படி அவர் அவர்களிடம், "நீங்கள் நெகேபுக்குச் சென்று அதற்கு அப்பால் மலைநாட்டுக்குப் போங்கள்; அந்த நாடு எப்படியிருக்கிறது, அங்கு வாழும் மக்கள் வலிமையுள்ளவரா ..........................................., அவர்கள் பலரா சிலரா, அவர்கள் நாடு வளமையானதா வளமையற்றதா, அவர்கள் நகர்கள் பாளையங்களா கோட்டைகளா, அந்த நாடு செல்வம் மிக்கதா ஏழ்மையானதா, மரங்கள் உண்டா இல்லையா என்று பார்த்து வாருங்கள்; ............................... இருங்கள்; அந்நாட்டின் கனிகள் சிலவற்றைக் கொண்டு வாருங்கள்" என்று கூறினார். அவ்வாறே அவர்கள் போய் சின் பாலைநிலத்திலிருந்து ஆமாத்து நுழைவாயிலருகில் இருந்த இரகோபு வரையிலும் நாட்டை உளவு பார்த்தனர். அவர்கள் நெகேபினுள் சென்று, பின் ...................................... வந்தனர். அங்கு அகிமான், சேசாய், தல்மாய் ஆகியோர் இருந்தனர். எகிப்திலுள்ள சோவானிலும் ஏழு ஆண்டுகளுக்கு முன்னரே எபிரோன் கட்டப்பட்டிருந்தது. பின் எசுக்கோல் பள்ளத்தாக்குக்கு வந்தனர்; அங்கிருந்து ஒரே குலையாயிருந்த ............................ பழங்களின் கிளையொன்றை அறுத்தனர்; ஒரு தடியில் கட்டிச் சுமந்து வந்தனர். அத்துடன் மாதுளம் பழங்கள், அத்திப் பழங்களையும் கொண்டு வந்தனர். இந்த இடம் திராட்சைக் குலையை முன்னிட்டு 'எசுக்கோல்' பள்ளத்தாக்கு என்று அழைக்கப்பட்டது. நாற்பது நாள்கள் நாட்டை உளவு பார்த்த பின் திரும்பி வந்தனர். அவர்கள் மோசேயிடம் "நீர் எங்களை அனுப்பிய நாட்டுக்குச் சென்று வந்தோம்; அதில் .................................. வழிந்தோடுகிறது. இதுவே அதன் கனி. அந்நாட்டின் மக்கள் வலிமை மிக்கவர்கள்; நகர்கள் அரண் சூழ்ந்தவை, மிகப் பெரியவை; அத்துடன் ஆனாக்கின் வழி மரபையும் கண்டோம். அமலேக்கியர் ............................ வாழ்கின்றனர்" என்றனர். மோசே முன் மக்களை அமைதிப்படுத்தி காலேபு, "நாம் உடனடியாகப் போய் நாட்டைப் பிடிப்போம்" என்றார். அவருடனிருந்த ஆள்கள் "அது முடியாது. அவர்கள் .......................................... மிக்கவர்கள்" என்ற தவறான தகவலைக் கூறினார்.

**விடைகள் :** துணிவுடன், திராட்சை, எபிரோனுக்கு, பாலும் தேனும், வலிமை, யோசுவா, நெகேபில், ஆண்டவர், வலிமையற்றவரா, சம்முவா

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் – 77

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்த ஆண்டு
   *(1666, 1769, 1765)*

2. உலகின் முதலாவது திரைப்படம் திரையிடப்பட்ட நாடு
   (அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா)

3. கோயில்களின் நகரம் என்று அழைக்கப்படுவது
   (உரோம், காஞ்சிபுரம், வத்திக்கான்)

4. மனித உடலின் மிக நீளமான எலும்பு
   (முதுகெலும்பு, தொடை எலும்பு, கால் எலும்பு)

5. தழீஇ
   (சொல்லிசை அளபெடை, இன்னிசை அளபெடை, செய்யுளிசை அளபெடை)

6. ‘இன்னா’ என்பதன் எதிர்ச் சொல்
   (என்னா, ஒண்ணா, இனியது)

பெயர் : ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 77
தொண்டன்
அ. பெ. எண் – 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விவிலியம் கற்போம் - 75 விடைகள்

மக்கள், வாளுக்கு, எகிப்து, இஸ்ரயேல், கூட்டமைப்பில், பாலும் தேனும், ஆண்டவர், வாக்களித்த, உயிர், காலபு

## அறிவை வளர்ப்போம் - 75 விடைகள்

1) சந்தன மரம்
2) பிக்காசோ
3) நான்கு
4) இருக்கு
5) காலணி
6) உவமையாகு பெயர்

**பரிசுகள் - அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குரூஸ் CRS**

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி பரிசு பெறுபவர்கள்**

- ச. நிலோஜினி
  பெரியஊறணி
  மட்டக்களப்பு
- பாக்கியராசா பிறின்சி
  குருக்கள் வீதி
  அக்கரைப்பற்று 7/3

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி**
**ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- ஆ. அன்மோனலிக்கா
  மாதா கோயில் வீதி
  பெரிய கல்லாறு - 01
- அ. யேசுநேசன்
  தேவகிராமம், அலிகம்பை
  அக்கரைப்பற்று

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 27 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  L. லியோனி
  ஒலிரூட் கீ.பி
  தலவாக்கலை
- **இரண்டாம் பரிசு** - 200/=
  ச. சஜீவ்ரோய்
  பெரியஊறணி
  மட்டக்களப்பு
- **3ம் பரிசு** - 100/=
  S. சஜீக்சன்
  பிரவின்குமார்
  பதுவாபுரி
  பொத்துவில்

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித மரியாள் பேராலய அருங்கொடைப் பணி

# வெள்ளி விழா





## "CHARISMATA"

"தூய ஆவியே வல்லமையின் ஆவியே"





பங்குத்தந்தையர்கள்,
பங்கு மக்களின் வாழ்த்துக்கள்

15





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org